# தமிழரசு

1-10-1993 ரூ.3





பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


கிராமப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு எந்த விதத்திலும் குறைந்து விடவில்லை!
—மாண்புமிகு முதல்வர் ... 2

காந்தி வழியில் உண்மையான கிராமராஜ்யம் அமைப்போம்!
—மாண்புமிகு முதல்வர் ... 6

சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமி
—மாண்புமிகு முதல்வர் ... 9

இடைத்தேர்தல்: முடிவுகள் ... 13

இல்லந்தோறும் அறிவொளி ... 19

பொம்மைக் கொலு ... 24

குறளின் குரல் ... 27

ஆர்க்காடு நவாபுகளும் அவர்களது நாணயங்களும் ... 30

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்: தோற்றமும் வளர்ச்சியும் ... 33

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்: பாடலும் படிப்பினையும் ... 37

சிதம்பரத்தில் சிறந்து வரும் நாட்டியாஞ்சலி ... 41

நெல்லை மாவட்டத்தில் பால் வளம் ... 43

மனநலம் (டாக்டர் பதில்கள்) ... 45

காலணி தயாரிப்பில் மகளிர் ... 47




## கலையழகு வாய்ந்த சிற்பங்கள்!

— மாண்புமிகு முதல்வர்

உயிரோட்டம் வாய்ந்த சிற்பங்களையும், சிலைகளையும் வடிப்பதில் நமது தமிழக மக்கள், தலை சிறந்து விளங்கினார்கள். மண், மரம், சுதை, செங்கல், கல், பளிங்கு, தந்தம், பித்தளை, வெண்கலம், செம்பு, இரும்பு, பொன், ஐம்பொன் போன்ற பல பொருட்களால், சிலைகள் வார்க்கப் பட்டன; படிமங்கள் சமைக்கப்பட்டன. நவீன உலோகவியல், அதாவது நுணுக்கங்களையெல்லாம் அன்றைக்கே நம் தமிழர், இந்தச் சிலைகளை வடிப்பதில் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று அறியும்போது, நாம் பெருமையும், பெருமிதமும் கொள்கிறோம்.

நம்நாட்டுச் சிலைகள், சிற்பங்கள், கலையழகு வாய்ந்தவை, நேர்த்தியானவை என்பது, நிலை பெற்றுவிட்ட உண்மை. ஆனால், அவைகளுக்கு மேலும் தனிச் சிறப்புகள் உண்டு. நாம் அவற்றைக் கண்ணுறும்போது, அவை வெறும் உருவங்கள் மட்டும்தான், என்று நம் மனதில் தோன்றாது. அவை நம்மை ஆன்மீக உணர்வுக்கு அழைத்துச் செல்லும் வழிகாட்டி என்கிற நிம்மதியும் வழங்குகின்றன. சரியாகச் சொன்னால், நமது சிற்பங்கள், அயல்நாட்டுச் சிற்பங்களைப் போன்று, வெறும் காட்சிப் பொருளாக இல்லாமல், கடவுளின் பெருமைகளைப் போதிக்கும் காட்சிப் பொருளாகவும் அமைந்திருக்கின்றன. கடவுள் நம்பிக்கை, நம்மவர்களின் வாழ்க்கை முறையில் இயற்கையாகவே ஏற்பட்ட பற்று, பாசமாகும்.

—'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்னும் நூலிலிருந்து.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

புரட்டாசித் திங்கள் - 15

மலர்: 24 இதழ்: 7

1-10-1993

விலை: ரூபாய் மூன்று






# கிராமப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு எந்த விதத்திலும் குறைந்துவிடவில்லை!

**— மாண்புமிகு முதல்வர் உரை**

— ஆட்டை சொல்லும் செய்தி:

**சி**றப்பான இந்த விழாவில் கலந்துகொண்டு கால்நடை பராமரிப்புத் துறையின் நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைப்பதிலும், அனைத்திந்தியக் கால்நடை - கோழியினக் கண்காட்சியைப் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைப்பதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


ஐரோப்பியப் பொருளாதார சமுதாயத்தின், European Economic Community -யின் உதவியுடன் செயல்படுத்தப்படும், ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், 60 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, அலுவலகக் கட்டடங்களையும், ஆய்வகக் கட்டடத்தையும் திறந்து வைப்பதில், நான் பேருவகை அடைகிறேன்.

தேசிய அளவிலான பெருமை மிகு கால்நடை-கோழியினக் கண்காட்சி, நமது மாநிலத்தில், அதுவும் சென்னையில் நடப்பது, கால்நடை மற்றும் கோழியினங்களை வளர்க்கும் நமது விவசாயிகள், அறிவியல்பூர்வமான கால்நடை பராமரிப்பின் வளர்ச்சிக்கும், ஒருங்கிணைந்த கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சிக்கும், ஆற்றி வருகின்ற சீரிய சேவைக்கு, சிறப்பு செய்ததாக அமைந்துள்ளது என்றால், அது மிகையாகாது.

மிக எளிய அளவில், *1892*-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற, கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு, கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக அரும்பணி ஆற்றி, நிறைவு செய்திருக்கும் இவ்வேளையில், அத்துறையினருக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஒரு காலத்தில் கால்நடைகள், மனிதனின் செல்வச் செழிப்பைக் கண்டறியும் ஒரு அளவு

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னைத் தீவுத்திடலில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறையின் நூற்றாண்டு விழா மற்றும் அகில இந்தியக் கால்நடை-கோழியினக் கண்காட்சியைத் துவக்கி வைத்து, ஐரோப்பியப் பொருளாதாரத் திட்ட உதவியுடன் நிறுவப்பட்ட கட்டடங்களைத் திறந்து வைத்துப் பேருரையாற்றினார். (21.9.93)**



கோலாகவும், சமூக அந்தஸ்த்தைக் கொடுக்கின்ற, ஒரு பெருமைக்குரிய விஷயமாகவும் கருதப்பட்டு வந்தன. தனி மனிதனின் சொந்த வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும், கால்நடைகள் பிரிக்க முடியாத பங்கு வகிக்கின்றன. சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், தனி மனிதனின் பொருளாதார வளர்ச்சிக்கும், கால்நடைகள் அடிப்படையாக விளங்குகின்றன. கிராமப்புறங் களில் வாழ்பவர்கள், சொந்தமாகக் கால்நடை களை வைத்துக் கொள்வதில், மிகுந்த ஈடு பாட்டினைக் காட்டுவதற்கு இதுவே காரணமாகும்.

வேளாண்மைத்துறை, புதிய விஞ்ஞான உத்தி களைக் கையாண்டு, கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுத்தாலும், அதே நேரத்தில், கிராமப் பொருளாதாரத்தில் கால் நடைகளின் பங்கு, எந்த விதத்திலும் குறைந்து விடவில்லை. மாறாக, சமுதாய, பொருளாதார வாழ்வில், அறிவியல் வளர்ச்சியின் காரணமாக, கால்நடை பராமரிப்பில் புதிய சிந்தனைகள் உருவாகி உள்ளன, என்று தான் கூற வேண்டும்.

குறிப்பாக, பசு மற்றும் எருமைகளின் விஞ் ஞானபூர்வமான இனப்பெருக்க முறையில், தமிழ்நாடு அகில இந்திய அளவில் ஒரு முன்னோடியாக விளங்குகின்றது. கால்நடைகளுக்கும், கோழி இனங்களுக்கும், ஊட்டத் தீவனம், சுகாதாரம், இனப்பெருக்க வசதிகள் போன்றவற்றைச் செய்து கொடுப்பதன் மூலம், பால், முட்டை, இறைச்சி ஆகியவைகளின் உற்பத்தியில், மற்ற மாநிலங் களை விட, நமது மாநிலம் ஒரு உயர்ந்த நிலையில் இருந்தாலும், நமது முழுமையான தேவைகளை அடைய, இன்னும் பல முன்னேற்றங்களையும் நாம் அடைய வேண்டியுள்ளது.

*1964*-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட, 'தீவிர கால்நடை மேம்பாட்டுத் திட்டம்', Intensive Cattle Development Programme, நமது மாநிலத்தில் கால்நடை மேம்பாட்டு நடவடிக்கைகளில், பெரும் பங்கு ஆற்றி வருகிறது. கால்நடை பராமரிப்பில் மட்டுமன்றி, கோழி வளர்ப்பிலும் தமிழகத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டு, கிராமப்புற பொருளாதார வளர்ச்சியில், ஒரு மாபெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி உள்ளது என்றால். அது மிகையாகாது. குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் கோழி வளர்ப் புத் தொழில், மிக அதிக அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. நாமக்கல் மற்றும் ராசிபுரம் தாலுக்காக்களில் உள்ள கோழி வளர்ப்புத் தொழில், மிக அதிக அளவில் வளர்ச்சி அடைந் துள்ளது. நாமக்கல் மற்றும் ராசிபுரம் தாலுக்காக் களில் உள்ள கோழி வளர்ப்போர், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றவர்களுக்கு, முன்மாதிரியாக வும், வழிகாட்டிகளாகவும், விளங்கி வருகின்றார்கள்.

கடின உழைப்புக்குச் சொந்தக்காரர்களான, நமது விவசாயப் பெருங்குடி மக்கள், வறட்சிக்கு இலக்காகும் பல பகுதிகளில், கோழிப் பண்ணை களை அமைத்து, தங்களுடைய வருமானத்தைக் குறிப்பிடத் தக்க அளவிற்குப் பெருக்குவதற்கு, வழிவகைகளைக் கண்டுள்ளார்கள். அனைத்திந் திய அளவில் உற்பத்திச் சாதனைகளில், இரண் டாம் இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாட்டில், இலட்சக்கணக்கான விவசாயிகள், கோழிப் பண்ணைகள் மற்றும் பால் பண்ணைகள் ஆகிய

## தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையின் நூற்றாண்டு விழா

தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை யின் நூற்றாண்டு விழாவும், அகில இந்தியக் கால்நடைக் கோழியினக் கண்காட்சித் தொடக்க விழாவும், ஐரோப்பியப் பொருளாதாரத் திட்ட உதவியுடன் நிறுவப்பட்ட கட்டடங்களின் திறப்பு விழாவும் 21.9.93 அன்று சென்னை தீவுத் திடலில் அண்ணா கலையரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை ஏற்றார்.

அகில இந்தியக் கால்நடைக் கண்காட்சியை. மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்து விழாப் பேருரை ஆற்றினார்.

விழாவில், இந்தியாவிலேயே முதலாவதாக தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை கண்டு பிடித்துள்ள புதிய தடுப்பு மருந்து, கலப்பினக் கால்நடை உற்பத்திக்கான உயிரணுக்கள், புதிய கலப்பின ரக 'அசில்' கோழி இனம் ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார்.

விழாவில், மாண்புமிகு கால்நடைப் பரா மரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் திரு தே. ஜனார்த்தனன், குஜராத் மாநில மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் திரு சங்கர்ஜி தாக்கூர், அரியானா மாநில மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் திரு ராம்தரம் பால்சிங் ஆகியோர் பேசினார்கள்.

விழாவில் தமிழக அமைச்சர்கள், வாரியத் தலைவர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு தலைமைச் செயலர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

விழாவிற்கு வருகை புரிந்தோரை கால்நடைப் பராமரிப்பு, மற்றும் மீன் வளத்துறை செயலர் திரு என்.பி. குப்தா அவர்கள் வரவேற்றுப் பேசினார். விழாவின் இறுதியில் துறை இயக்குநர் டாக்டர் எஸ்.பி. அன்புமணி அவர்கள் நன்றி தெரிவித்தார்.



**மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னைத் தீவுத்திடலில் நடைபெற்ற கண்காட்சியில் அகில இந்திய அளவில் கலந்து கொண்ட கால்நடைகளைப் பார்வையிட்டார். (21.9.93)**

வற்றைத் தொடங்கி, மிகவும் இலாபகரமான தொழிலாக நடத்தி வருகிறார்கள். இத்தொழில் களின் வளர்ச்சிக்குத் தேவையான கால்நடை நிலையங்கள், Veterinary Hospitals, செயற்கைக் கருவூட்டு நிலையங்கள், Artificial Insemination Centres ஆகியவற்றை, இந்த அரசு ஏற்படுத்தி, ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்கு வழிவகுத்து வருகின்றது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேகமாக விஞ்ஞானம் வளர்ந்து வரும் சூழ்நிலையில், நமது உற்பத்தித் திறனை இன்னும் அதிகப்படுத்துவது, மிக முக்கியமானதாகும். முதலில் உள்ளூர்க் கால்நடைகளின் தரத்தை, மேம்படுத்த வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் இதனைச் செயலாக்க, எங்கள் அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கால்நடை பராமரிப்பில் தொடர்ந்து வளர்ச்சி காண ஒரு புதிய கொள்கையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். மேய்ச்சல் நிலங்கள் வேகமாகக் குறைந்து வரும் சூழ்நிலையில், தீவினப் பயிர்களும் குறைந்த அளவில் தான் பயிரிடப்படுகின்றன.

எனவே, கால்நடைகள் மற்றும் கோழி இனங்கள் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் சத்தான தீவனங்களைப் பெரிய அளவில் தயாரித்து, சாதாரண விவசாயிகளுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலையும், அவசியமும் ஏற்பட்டுள்ளன. அதேபோல், அதிகரித்து வரும் தனி நபர் பால் தேவையைக் கருத்தில் கொண்டு, இனி வரும் ஆண்டுகளில், பால் பெருக்கத்திற்கு வழிவகுக்க, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளை நாம் வலுப்படுத்த வேண்டி உள்ளது.


எளிதில் புரிந்து கொண்டு பின்பற்றக் கூடிய, அறிவியல் பூர்வமான வேளாண்மை பற்றிய செய்திகள், விவசாயிகளுக்குக் கிடைக்குமாறு செய்வதோடு, அவற்றை அவர்கள் கையாளச் செய்ய வேண்டியதும், நமது தலையாய கடமை ஆகும்.

மிக அதிக அளவில், கால்நடைத் தானியங்கி மருந்தகங்களை ஏற்படுத்தி, அதன் மூலம், ஊட்டச் சத்து மிகுந்த தீவனங்களின் உபயோகத்தை அதிகரித்து, கொள்ளை நோய்களினால், நமது கால்நடைகளுக்கும். கோழி இனங்களுக்கும் ஏற்படும் பேரிழப்பைத் தவிர்க்க வேண்டும். இது போன்ற தேவைகளை எல்லாம் உள்ளடக்கிய, ஒரு தொலை நோக்குத் திட்டத்தை, Long range plan-ஐ தமிழக அரசு தயாரித்து வருகிறது.

உலக வங்கியின் நிதி உதவியுடன், 46.62 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை, மாடுகள் மற்றும் எருமைகள் மேம்பாட்டுத் திட்டத்தை, மிகப் பெரிய அளவில் செயலாக்கத் திட்டமிட்டுள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் மூலம், பால் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி, சுற்றுப்புறச் சூழல் பாதிக்காத வகையில், பால் பண்ணை நடத்த முடியும்.

விஞ்ஞான பூர்வமாகக் கால்நடைகள் பராமரிக்கப்படுமேயானால், கால்நடைப் பண்ணைகள், இலாபகரமான ஒரு முழு நேரத் தொழிலாக அமையும் என்பதை, நமது விவசாயிகளும், படித்த



## ஒரே நெருப்பின் ஒளி!

உலகில் 'தீண்டத்தகாதவர்' என்று எவருமே யில்லை. ஏனெனில், ஒரே நெருப்பின் ஒளிதான் ஒவ்வொருவரும். ஆகவே, மனிதப் பிறவியெடுத் தோரெவரையும் தீண்டாதவர் என்று ஒதுக்கி வைப்பது தவறு.

## சரியான வாழ்க்கை!

சரியான முறையில் வாழ்க்கை நடத்த ஆரம் பித்தோமானால், மூடநம்பிக்கைகளும் பிற குற்றங் களும் தாமாகவே விலகிப்போகும். சரியான முறையில் நடந்து கொள்வதே முக்கியம். மனத் திலுள்ள நம்பிக்கைகள் எவ்வாறாயினும் சரி. அவை தாமாகவே சீர்ப்படும்.

வேலையற்ற ஆண்களும் பெண்களும் உணர வேண்டும் என்பதே, எனது அன்பான வேண்டு கோள் ஆகும்.

இன்று நான் தொடங்கி வைத்த, அனைத் திந்தியக் கால்நடை-கோழியின கண்காட்சி, நமது மாநிலத்தில் உள்ள விவசாயப் பெருமக்கள், இதர மாநிலங்களின் கால்நடை வளர்ப்பில் ஏற் பட்டுள்ள முன்னேற்றத்தைப் பற்றி அறிந்து, தங்களிடம் உள்ள கால்நடைகளின் தரத்தை மேலும் உயர்த்துவதற்கு, ஊக்கமளிப்பதாக அமையும் என நம்புகிறேன்.

கால்நடைகளை, நமது குடும்பத்தின் அங்கத் தினர்களாக நினைக்கும் போக்கு, நம்மிடையே உள்ளதைப் போலவே, கால்நடை பராமரிப்பு முறைகளில், நவீன விஞ்ஞான அறிவைப் புகுத்த வேண்டும் என்பதையும், நமது மரபுகளில் ஒன்றாகக் கருத வேண்டும் என்பதே, எனது அன்பான வேண்டுகோள். அவ்வாறு செய்வதால், நமது விவசாயப் பெருமக்களும் பயன் பெறு வார்கள்; நமது கால்நடைச் செல்வங்களும் நன்மை அடையும்.

பொதுவாகவே, விலங்குகளிடம் அன்பு காட்ட வேண்டும் என்ற கொள்கை, எனக்கு உண்டு. செல்லப் பிராணிகளை வளர்த்து, அவற்றின் மீது அன்பு செலுத்துவதும் எனக்குப் பிடிக்கும். செல்லப் பிராணிகள், நம்மிடம் எதையும் எதிர்பார்ப்பது இல்லை; மாறாக நமக்கு மகிழ்ச் சியை அளித்து அன்பின் அர்த்தத்தை அவை உணர வைக்கின்றன. கால்நடைகளையும் தங்க ளுடைய செல்லப் பிராணிகளாக கருதும் பலரை, எனக்குத் தெரியும். கால்நடைகள் அபரிமிதமான அன்பை, தங்களது எஜமானர்கள் மீது பொழி கின்றன.

இதை நன்கு புரிந்து கொண்டால், அதுவே சிறந்த கால்நடை மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்குவதற்கும், செயலாக்குவதற்கும், அடிப் படையாக அமையும். இந்தக் கண்காட்சியில், பல்வேறு மாநிலங்களில் இருந்து, 600-க்கும் மேற்பட்ட கலப்பினக் கால்நடைகள், பங்கு கொண்டுள்ளன என்பதை அறிந்து, மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய வேளையில், கால்நடைப் பரா மரிப்பாளர்களுக்கு, பயன் அளிக்கக்கூடிய IBD, Infectious Bursal Disease என்ற கொள்ளை நோயைத் தடுக்கும் தடுப்பு மருந்து, Vaccine-ஐ வெளியிடுவதில், மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும், கலப்பினக் கால்நடைகளை உருவாக்க, "Ebryo Transfer" என்ற நவீன முறையின் கீழ் உருவாக்கப்பட்ட, Embryo"-க்களை அறிமுகம் செய்வதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த துறையின் பணிகளை ஆய்வு செய்த போது, உள்நாட்டுக் கோழியின வகைகளை மேம்படுத்துவதற்கு, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், என ஆணையிட்டிருந் தேன். எனது கருத்தின் அடிப்படையில் இந்தத் துறை, நோய் எதிர்ப்புச் சக்தி கொண்ட, கலப் பினக் கோழி வகையைச் சேர்ந்த, Asil கோழி இனத்தை உருவாக்கி உள்ளார்கள். இந்த Asil கோழிகளை, இந்த நல்ல நிகழ்ச்சியில் அறிமுகப் படுத்துவதில், நான் பெருமிதம் அடைகிறேன். இத்துறையின் பணி மேலும் சிறக்க வேண்டும் என்பதே என் அவா.

நூற்றாண்டு விழாக் கொண்டாடும் கால்நடை பராமரிப்புத் துறை, மேலும் பல அரிய சாதனை களைச் செய்து, தமிழக விவசாயப் பெருமக்களின் நன்மதிப்பை, தொடர்ந்து பெற வேண்டும் என்ற எனது எதிர்பார்ப்புகளைத் தெரிவித்து, இந்தக் கண்காட்சி, நமது தமிழக விவசாயிகளின் வாழ்க் கையில், ஒரு திருப்பு முனையாக அமைய வேண் டும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# "காந்தி வழியில் உண்மையான கிராம ராஜ்யம் அமைப்போம்!"

## மாண்புமிகு முதல்வர்

'மகாத்மா காந்தி' என்கிற மந்திரச் சொல், சாதாரண இந்தியனை உலக சரித்திரத்தில் சுய மரியாதையோடும், பெருமையோடும் அறிமுகப் படுத்திவைத்த பெயர், இந்தியாவைக் 'காந்தி தேசம்' என்று அழைக்க வேண்டுமெனத் தந்தை பெரியார் கேட்டுக்கொண்டாரென்றால், அண்ணல் காந்தியின் பெருமைகளை விளக்கிச் சொல்ல வேறு எவரும் தேவையில்லை.

காந்திஜி சாமானிய மனிதனின் கண்ணோட்டத்திலும், பெரிய பிரச்சினைகளை அணுகத் தெரிந்து வைத்திருந்த சீர்திருத்தச் செம்மல். சுருக்கமாகச் சொன்னால், இந்த நாட்டில் எவரோடும் ஒப்பிடமுடியாத ஈடுஇணையற்ற உயர்ந்த தலைவர், காந்திஜி.

சுதந்திர இந்தியாவின் பிரச்சினைகள் எப்படி இருக்கும் என்பதைத் தனது தொலைநோக்குப் பார்வையில் கணித்து, தமது ஒப்பற்ற காந்தியக் கொள்கைகளின் மூலம், அவற்றிற்கெல்லாம் வழிமுறைகளையும் வகுத்துச் சொன்னார் அவர். எனவேதான் 'The first and foremost indigenous Social Scientist of India' என்று அவர் அழைக்கப் பட்டார்.

அரசியல் சுதந்திரம் மட்டுமன்றி, பொருளாதாரச் சுதந்திரத்தையும் இந்தியா அடைய வேண்டும் என்பதே, அவரது அனைத்து எண்ணங்களிலும் மூலப்பொருளாய் விளங்கியது.

அரசியலில் ஈடுபட்டிருந்த மகாத்மா காந்தி அவர்களின் வாழ்க்கை நெறி, வரலாற்று ஆசிரியர்களுக்குப் பெரிய வியப்பைத் தந்தது. 'சத்தியம்', 'உண்மை' என்ற மாபெரும் தத்தவம் அவரது எண்ணங்களிலும், செயல்களிலும், மற்றும் அனைத்து வாழ்க்கைக் கூறுகளிலும் பரவியிருந்த பாங்கு அவர் ஏற்றிருந்த பொதுப் பணிகளுக்குத் தீவிரமான வழியமைத்துத் தந்தது. இந்த உலகத்தில் தோன்றிய தலைவர்களில் எவருமே காந்தியடிகளைப் போன்று அரசியல், பொருளாதாரம், சமுதாயம், ஆன்மீகம் என்று தாம் தொட்ட அனைத்துத் துறைகளிலும் இந்தத் தத்துவத்தைப் பின்பற்றவில்லை என்பது, உலக வரலாற்றில் அதிசயிக்கத்தக்க உண்மையாகும்.



மகாத்மாவின் அகிம்சைக் கொள்கைகள், நடைமுறைக்கு உதவாதது என்ற சிலரது நினைப்பு பொய்யாகி வருவதை நாம் கண்டுவருகிறோம். இன்றைய உலகிலும் சரி, எதிர்காலத்திலும் சரி, உலக நாடுகளுக்கு இடையே நிலவிவரும் சண்டை சச்சரவுகள், வன்முறைச் செயல்கள் ஆகியவற்றினைத் தடுப்பதில், இந்த அகிம்சை பெரும் பங்கு வகிக்கும் என்பதை, உலக அமைதியில் அக்கறை கொண்டவர்கள் பின்னரே தெரிந்து கொண்டனர். அதுபோலவே, எதிர்ப்பினைத் தெரிவிப்பதற்கு வன்முறை நாடாத மக்களுக்கு, சத்தியாகிரகத்தைவிட வேறெந்த எதிர்ப்பு முறைகளும் சரியான வழி முறைகள் ஆகாது எனவும் காந்தியடிகள் கருதினார்.

அதுவன்றி, தீவிர வன்முறையினை அடிப் படையாகக் கொண்டு, சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்க்க நினைக்கும் சிலர் ஆயுதம் தாங்கி, அமைதியைக் குலைத்து, சாதாரண மக்களை அன்றாடம் கடுந்துயரத்தில் ஆழ்த்தும் செய்கைகளை, நாம் இன்று எங்கும் காண்கிறோம்! இப்படிப்பட்டவர்கள் விரும்புகிற வெற்றி, அவர்களுக்குக் கிடைக்காமல் தூரப் போய்க் கொண்டே இருக்கிறது. ஆனால், காந்தியடிகள் வலுவாகத் திட்டம் தீட்டி, வன்முறையின்றி அமைதி வழியில், நமக்குச் சுதந்திரத்தினைப் பெற்றுத்தந்து, உலக வரலாற்றில் எவரோடும் ஒப்பிடமுடியாத சாதனையாளராகத் திகழ்கிறார்.

தனது அனுபவப் பாணியில், இந்திய நாட்டில் புரையோடிப் போயிருக்கிற பல்வேறு பிணிகளைக் களைய, மகாத்மா காந்தி எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம். மகளிர் மேம்பாடு, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கிராமியத் தொழில் நலம் காத்தல், மதங்களிடையே ஒற்றுமை,

ஆகியவற்றினை நடைமுறைப்படுத்த அவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை. மறக்க முடியாதவை.

மகாத்மா காந்தி அவர்களின் முக்கியக் கொள்கையான மதுவிலக்கினை, இன்றைக்குத் தமிழகத்தில் எங்கள் அரசு குறிப்பாக, மகளிர் மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு, நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது என்பதை எண்ணி நான் பெருமிதம் கொள்கிறேன். எங்களின் இந்தச் செயல், இச் சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிணிகளையும் களைய, நாங்கள் தொடுத்திருக்கும் அறப்போரின் முதற்கணை என்பதனை, உறுதியோடு உங்கள் முன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவை ஒழிக்க முயற்சி மேற்கொள்ளாமல், மகாத்மாவின் பிறந்த நாளைக் கொண்டாடுவதும், பெண்ணடிமையை நீருற்றி வளர்த்துக் கொண்டு, தேசப்பிதாவின் பிறந்த நாளைப் பிரமாதப் படுத்துவதும், ஜாதியத்தைப் பேசி மக்களின் மனதில் ஜாதிய விஷத்தை விதைத்துக் கொண்டு, காந்திஜியின் பிறந்த நாளை விளம்பரப்படுத்துவதும்; வெறும் சடங்குகளாக வேண்டு மானால் இருக்க முடியுமே தவிர, அவர் விரும்பிய கொள்கைகளை நாம் பின்பற்றுவதாக நிச்சயமாக இருக்க முடியாது.

எனவேதான், மது ஒழிப்பில் இந்த அரசு காட்டிவரும் தீவிரத்தையும் மக்கள் அதற்காக வழங்கிவரும் ஆதரவையும், பாராட்டுக்களையும், மலர் மாலைகளாகக் கருதி, அவற்றை அண்ணல் காந்தி அடிகளின் பிறந்த நாள் விழாவில், அவருக்கு அணிவித்து மகிழ்வதில் நான் பெருமைப் படுகிறேன்!

மகாத்மா காந்தி தனது இதயத்தில் வைத்துப் போற்றிய இன்னொரு கொள்கை தீண்டாமை ஒழிப்பு. 'கடவுளின் குழந்தைகள்' என்று அவரால் கருதப்பட்ட ஆதிதிராவிடர் மக்களை, தங்களது அரசியல் இலாபத்திற்காகத் தூண்டிவிட்டு, பலிகடாவாக ஆக்குகிற முயற்சிகள், நம்முடைய தமிழ்நாட்டிலேயே தற்போது நடந்து வருவதை, நான் சட்டமன்றத்திலே பலமுறை எடுத்துரைத்து உள்ளேன்.

வாழ வழியற்ற அந்த ஏழை மக்களுக்கு உதவுகிற எங்களது இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்தி, தங்களது வன்முறைத் திட்டத்திற்கு அவர்களைப் பலியாக்க நினைக்கிறவர்களுக்கு, அண்ணல் காந்தி அடிகளின் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன், என்னுடைய ஆட்சியில் ஆடுகளை ஏமாற்றி, ஓநாய்கள் இரத்தமும் குடிக்க முடியாது; மிரட்டிச் சத்தமும் போடமுடியாது. ஏனென்றால், நான் ஓநாய்களைச் சந்தித்துவிட்டு, வெறிநாய்களை வீழ்த்திவிட்டுத்தான் இந்த ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருக்கிறேன். எனது இந்த எச்சரிக்கை மக்கள் எதிரிகளுக்குப் புரியுமென்று நம்புகிறேன். இதைக்கேட்டு அவர்கள் திருந்துவார்கள் என்று நம்புகிறேன். இது மகாத்மா காந்தி அவர்களுடைய பிறந்த நாள் கொண்டாட்டம் என்பதால், இந்த நேரத்தில் நான் இந்த அளவுக்குத்தான் கூற முடியும்.



## அடுத்த இதழில்...

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்த -

விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டத் தொடக்க விழா மற்றும் தென்னார்க்காடு - வள்ளலார் மாவட்டப் பெயர் சூட்டும் விழா பற்றிய நிகழ்ச்சித் தொகுப்பு - முழு விவரம்.

பக்கத்துக்குப் பக்கம் படங்கள்!

அண்ணல் காந்தி அடிகளின் மனதைக் கவர்ந்த மற்றொரு அம்சம் கிராம ராஜ்யம். 'கிராம ராஜ்யம்' உருவாக்கப்படவேண்டுமென்ற காந்திஜியின் எண்ணம்தான், இன்றைக்குப் பல்வேறு உருப்பெற்று, கிராமங்கள் தன்னிறைவு பெறுகிற திட்டங்களை மத்திய அரசும், மாநில அரசுகளும் தீட்டி நடைமுறைப்படுத்துவதற்கு அடிப்படையாய் அமைந்திருக்கிறது. 'தமிழ்நாட்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி வழங்கப்படுவதன் நோக்கம், காந்தி அடிகளின் கனவுகளை நனவாக்கத் தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதுதான்.

இந்தியாவின் ஆத்மா கிராமங்களில்தான் இருக்கிறது என்ற காந்தி அடிகளின் கூற்று வெறும் வார்த்தை ஜாலம் அல்ல; அது அவரது அனுபவத்தின் வெளிப்பாடு. குறிப்பாக சம்பரான் (Champaran) என்ற கிராமப் பகுதி விவசாயிகளை, இந்தியாவிற்கு வந்தவுடன் முதல் முதலில் சந்தித்த போது 'நான் அவர்களைச் சந்தித்ததன் மூலம் கடவுளை அகிம்சையை, உண்மையை நேருக்கு நேர் சந்தித்தேன்' என்று கூறி மனம் மகிழ்ந்தார் அவர். அப்படிப்பட்ட கிராம ஏழைகளுக்கு உதவுகிற பணியைத்தான் எங்கள் அரசும் மனமுவந்து, தமிழகத்தில் செயற்படுத்தி வருகிறது. அதன்மூலம் உண்மையான கிராம ராஜ்யம் உருவாக, மேலும் தேவையான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே மகாத்மா காந்தி நமக்குக் காட்டி விட்டுப் போயிருக்கிற புனித வழியில் தொடர்ந்து, கௌரவத்தோடு நாம் தலை நிமிர்ந்து தைரியமாக முன்னேறவும், அவர் அமைத்துத்தந்துள்ள பாதையில் நடந்து, உலக அமைதிக்குப் பாடுபடவும், அவரது இந்தப் பிறந்தநாள், நமக்கு மீண்டும் வழிகாட்டி உள்ளது. ஒரு வாய்ப்பளித்துள்ளது.

—'புரட்சித் தலைவியின் முழக்கம்' என்னும் நூலிலிருந்து.



# 23 திருக்கோயில்களுக்கு ரூ.1.70 கோடியில் திருப்பணி!

—மாண்புமிகு முதல்வர் ஆணை

தமிழகத்திலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோயில்களைச் சீரான முறையில் நிர்வகிப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 'தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தை' அமைத்து, பல்வேறு திருக்கோயில்களில் புதிய கட்டுமானப் பணிகள், திருப்பணிகள் மற்றும் ஆலய மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கீழ்க்கண்ட 23 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்வதற்காக ரூ.1 கோடியே 70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்திருக்கிறார்.

1. நாறும்பூநாத சுவாமி திருக்கோவில்-திருப்புடைமருதூர், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

2. பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், கரூர் திருச்சி மாவட்டம்.

3. ராஜகோபால சுவாமி திருக்கோயில், மன்னார்குடி, நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்.

4. சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், எட்டுக்குடி, நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்.

5. மகாலட்சுமி திருக்கோயில் (அஷ்டலட்சுமி கோயில்) பெசன்ட் நகர், சென்னை.

6. காளியம்மன் திருக்கோயில், செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்.

7. வேணுகோபாலசுவாமி திருக்கோயில், சத்தியமங்கலம்; பெரியார் மாவட்டம்.

8. சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை, தஞ்சாவூர்.

9. கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில், மதுரை மாவட்டம்.

10. நாகப்பசெட்டி பிள்ளையார்கோயில், தம்புச் செட்டி தெரு, மண்ணடி, சென்னை.

11. கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை.

12. மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை.

13. இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்.

14. தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, சென்னை.

15. வலம்புரிநாத சுவாமி திருக்கோயில், திருவலம்புரம், நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்.

16. கள்ளபிரான்சுவாமி திருக்கோயில், ஸ்ரீவைகுண்டம், சிதம்பரனார் மாவட்டம்.

17. கோட்டை மாரியம்மன் கோயில், திண்டுக்கல், திண்டுக்கல் அண்ணா மாவட்டம்.

18. பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக் கேணி, சென்னை.

19. திருவாலீஸ்வரர் திருக்கோயில், பாடி, சென்னை.


20. மாரியம்மன் திருக்கோயில், இருக்கன்குடி, காமராசர் மாவட்டம்.

21. பவானியம்மன் திருக்கோயில், பெரியபாளையம், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்.

22. பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், சத்தியமங்கலம், பெரியார் மாவட்டம்.

23. பகவதி அம்மன் திருக்கோயில், மண்டைக்காடு, கன்னியாகுமரி மாவட்டம்.






# சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமி

— மாண்புமிகு முதல்வர்

தமிழ்நாடு, சுற்றுலாப் பயணிகளுடைய சொர்க்க பூமி என்றால் அது மிகையாகாது. இது கலையும், கலாச்சாரமும் நிறைந்த நாடு; வற்றாத வளங்கள் கொண்ட சரித்திரப் பூமி; காண் போரைக் கவரத்தக்க எழில்மிகு கோடை வாசஸ் தலங்கள்; தமிழ்ப் பண்பாட்டின் நிலைக்கலன் களாக விளங்கும் பெருங்கோயில்கள்; சிற்பக் கலைக்கு மகுடம் சூட்டிய பெருமை இணையற்ற கலாச்சாரத்தை வெளியுலகிற்குப் பறைசாற்று கின்ற புராதன பொக்கிஷங்களாகும்.





இவைகளைப் பார்க்க வருகிற நோக்கில், தமிழ்நாட்டிற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிக்கிற வகையில் அவர்களுக்குத் தேவைப் படுகின்ற வசதிகளை அமைத்துக் கொடுக்கத் தான், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் துவக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் சுற்றுலாவை வளர்ப்பதும், சுற்றுலாப் பயணிகளின் வசதி களைப் பெருக்குவதும் முக்கியக் குறிக்கோள் களாக இருக்கின்றன.

சுற்றுலாப் பயணிகளின் வசதிகளைக் கருத்தில் கொண்டு திருத்தணி, திருக்கழுக்குன்றம், மேல்மருவத்தூர், கடலூர், மேட்டுப்பாளையம், கூடலூர் குன்னூர், இராமேசுவரம் மற்றும் ஒசூர் போன்ற இடங்களில் ஓட்டல்கள் புதிதாகக் கட்டப்பட்டு, விரைவில் திறக்கப்படும் நிலையில் இருக்கின்றன. மேலும் இராணிப்பேட்டை, உளுந்தூர்ப்பேட்டை, சேலம், கும்பகோணம், தஞ்சாவூர், கொடைக்கானல் போன்ற இடங்களில் புதிதாக ஓட்டல்களும் கட்டப்படும். சென்னைக்கு வருகிற சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையில் பிராட்வேயிலுள்ள பழைய சட்டக் கல்லூரி விடுதியினை, எல்லா வசதிகளும் கொண்ட ஓட்டல்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

—'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்னும் நூலிலிருந்து.



(உலகச் சுற்றுலா வளர்ச்சி நாள்: செப்டம்பர்-27)


# படமும் செய்தியும்




திருப்பதி செல்லும் வழியில் சென்னை வந்த மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களை, சென்னை விமான நிலையத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மலர்ச்செண்டு கொடுத்து அன்புடன் வரவேற்றார் (23.9.'93).

அண்மையில் சாலை விபத்தில் மரணம் அடைந்த மைலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.எம். ரங்கராஜன் அவர்களின் இல்லத்துக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்று, அவரது துணைவியார் திருமதி. மாலதி ரங்கராஜன் அவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார் (21.9.'93).





அண்மையில் நடந்த லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தினார் (25.9.'93).



# படமும் செய்தியும்...

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. எஸ். நாகூர் மீரான் அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. எம். தென்னவன் அவர்கள் உலகச் சுற்றுலா தினத்தை சென்னையில் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார் (27.9.'93).



சென்னை இராஜாஜி மண்டபத்தில், அகில இந்திய ஆப்பிள் கண்காட்சியினை, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் தொடங்கி வைத்தார் (28.9.'93).

# இடைத்தேர்தல்: (20.9.93) முடிவுகள்

## 34. ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி

தேர்தல் நாள் : 20.9.1993
மொத்த வாக்காளர்கள்: 1,93,905
பதிவான வாக்குகள் : 1,47,498
செல்லாத வாக்குகள் : 2,215

**திரு. கோவி. எஸ். மோகனன் (அஇஅதிமுக) வெற்றி**

| | |
|---|---|
| 1. கோவி. எஸ். மோகனன் (அஇஅதிமுக) | 61,584 |
| 2. ஆர்க்காடு என். வீராசாமி (திமுக) | 48,923 |
| 3. கே.எல். இளவழகன் (பாமக) | 26,461 |
| 4. ஜே. அசேன் (சுயே) | 4,924 |
| 5. எம். துளசி (இதேகா) | 816 |
| 6. வி.பி. ரவி யாதவ் (சுயே) | 810 |
| 7. கண்ணையன் (பாரத மக்கள் காங்கிரஸ்) | 146 |
| 8. புலவர் மணி எழிலன் (சுயே) | 141 |
| 9. ஜி. ஜெயராமன் (சுயே) | 121 |
| 10. பி.எஸ். உசேன் (சுயே) | 120 |
| 11. எம். கணேசன் (சுயே) | 114 |
| 12. டி. அப்துல் சத்தார் (சுயே) | 90 |
| 13. டாக்டர் கே. பத்ம ராஜன் (சுயே) | 83 |
| 14. டி. பிரபு (சுயே) | 82 |
| 15. கே. ராஜா (சுயே) | 81 |
| 16. ஜே. வரதன் (சுயே) | 79 |
| 17. கே. ஆதிநாராயணன் (சுயே) | 78 |
| 18. ஆர். விஸ்வநாதன் (சுயே) | 73 |
| 19. வி.டி.ஆர். வீரப்ப கவுண்டர் (சுயே) | 73 |
| 20. இ. ஜெகந்நாதன் (சுயே) | 71 |
| 21. சி.கே. கோவிந்தன் (சுயே) | 70 |
| 22. ஆர்.என். சூரியமூர்த்தி (சுயே) | 62 |
| 23. ஓ.எ. வரத தேசிகன் (சுயே) | 54 |
| 24. கே. ஆறுமுகம் (சுயே) | 47 |
| 25. எஸ். வள்ளி வேலன் (சுயே) | 44 |
| 26. ஆர். மணி (சுயே) | 40 |
| 27. கே.எல். மணி (சுயே) | 37 |
| 28. கே. அனுமந்தராவ் (சுயே) | 36 |
| 29. டாக்டர் அமான்கான் (தேசீய மாணவர் கட்சி) | 23 |




## 22. பழநி நாடாளுமன்றத் தொகுதி

தேர்தல் நாள் : 20.9.1993
மொத்த வாக்காளர்கள்: 10,12,517
பதிவான வாக்குகள் : 6,68,691
செல்லாத வாக்குகள் : 10,546

**வேட்பாளர்கள் அவர்கள் சார்ந்த கட்சி மற்றும் அவர்கள் பெற்ற வாக்குகளின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.**

**திரு பி. குமாரசாமி (அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்) வெற்றி.**

| | |
|---|---|
| 1. பி. குமாரசாமி (அஇஅதிமுக) | 2,78,955 |
| 2. திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் (திமுக) | 2,34,070 |
| 3. கே.எஸ். வேணுகோபால் (இதேகா) | 1,30,626 |
| 4. பி. சின்னதுரை (சுயே) | 1,483 |
| 5. கே. குப்புசாமி (சுயே) | 1,115 |
| 6. எம்.கே.வி. கோபாலகிருஷ்ணன் (சுயே) | 922 |
| 7. வி.எம். சின்னபொன்னுவாத்தியார் (சுயே) | 880 |
| 8. ஜி. நாச்சிமுத்து (சுயே) | 879 |
| 9. எம். நடராஜன் (சுயே) | 783 |
| 10. வி. ராஜாங்கம் (சுயே) | 678 |
| 11. ஜி. சாமுவேல்ராஜ் (சுயே) | 606 |
| 12. கீழ்நாமக்காரர் கிரிதாதி ஆனந்தர் (சுயே) | 497 |
| 13. கே. சுப்பையா கவுண்டர் (சுயே) | 406 |
| 14. எம். ராயப்பா நாடார் (சுயே) | 398 |
| 15. கே. பாண்டியன் (சுயே) | 327 |
| 16. யு. நாகூர்மீரான் பீர்முகமது (சுயே) | 320 |
| 17. எம். பத்மநாபன் (சுயே) | 311 |
| 18. கே. திருமான் (சுயே) | 300 |
| 19. கேப்டன் வேணுகுமார் மஹாதேவன் (சுயே) | 278 |
| 20. வி.டி.ஆர். வீரப்பகவுண்டர் (சுயே) | 245 |
| 21. எ. வையாபுரி (தமிழ்நாடு இந்து வேளாளர் இளைஞர் கழகம்) | 239 |
| 22. எ. முகமது உசைன் (சுயே) | 213 |
| 23. பி. கவிதாசன் (சுயே) | 207 |
| 24. வி.எஸ். பாலசுப்ரமணியம் (தமிழக ஜனதா) | 206 |
| 25. செல்வி கே.ஆர். கலையரசி (சுயே) | 205 |
| 26. வி. தியாகராஜன் (சுயே) | 198 |
| 27. டி. கருத்தபாண்டியன் (சுயே) | 197 |
| 28. கே. சுருளிவேலு (சுயே) | 194 |
| 29. காகா ஜொகிந்தர்சிங் உர்ப் 'தார்தி-பகத்' (சுயே) | 186 |
| 30. பி. தெய்வநாயகம் (சுயே) | 186 |
| 31. டாக்டர் கே. பத்மராஜன் (சுயே) | 183 |
| 32. கே. பாலசுப்ரமணியம் (சுயே) | 178 |
| 33. தொப்பில் ராஜப்பன் (சுயே) | 177 |
| 34. என். ஆதிநாராயணன் (சுயே) | 140 |
| 35. டாக்டர் பி. செல்லதுரை (சுயே) | 136 |
| 36. யு. கண்ணன் (சுயே) | 133 |
| 37. ஆர். முத்தையா (சுயே) | 133 |
| 38. எம்.வி. ராமசாமி (சுயே) | 133 |
| 39. பிரான்சிஸ் சேவியர் (சுயே) | 111 |
| 40. எம். அருள்மணி (சுயே) | 110 |
| 41. பி. ஆறுமுகம் (சுயே) | 106 |
| 42. எம். மன்மதன் (சுயே) | 99 |
| 43. டி. ஆண்டவன் (சுயே) | 95 |
| 44. என். இராஜகோபாலன் (சுயே) | 95 |
| 45. பி. கன்னையன் (சுயே) | 76 |
| 46. கே. லோகநாதன் (சுயே) | 69 |
| 47. தங்கம்ருதமுத்து (கிராம முன்னேற்றக் கழகம்) | 61 |



## சுகமான சுற்றுலா!

செப்டம்பர் 27 உலகச் சுற்றுலாத் தினம். சுற்றுலா பரந்த மனப்பான்மையை வளர்க்கிறது. பல்வேறு புதிய விஷயங்கள் அறிந்திட உதவுகிறது. தன்னம்பிக்கையும் மனமகிழ்வையும் அளிக்கிறது. சுற்றுலாப் பயணியரின் சொக்க பூமியாக நம் நாடு திகழ்கிறது. பூகோள அமைப்பியல் ரீதியில் அனைத்தும் இங்கு காணக்கிடக்கின்றன. ஆண்டு முழுவதும் உறைபனி போர்த்தி உறங்கும் இமயச் சிகரங்கள், அதற்கு நேர் மாறான வறண்ட தார் பாலைவனம், மழை கொட்டும் மேகாலயா, இதமான நாஞ்சில் நாடு என ஒரே நேரத்தில் நாட்டின் நான்கு மூலைகளில் வெவ்வேறு தட்பவெப்ப நிலைகள் நிலவும் அதிசயம் 'அல்ட்ரா மாடர்ன்' நகர வாசிகளும் உண்டு. அந்தக் காலத்து ஆதிவாசிகளும் உண்டு.

பல்வேறு மதங்கள், மொழிகள், உணவு-உடைப் பழக்க வழக்கங்கள், கலை, கலாச்சாரம், பாரம்பரியம் என மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசம், அண்டை நாடுகளான நேபாளம், திபெத் பகுதிகளின் பிம்பமாக நம் நாட்டிலேயே சில பகுதிகள் திகழ்கின்றன.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அனைத்து அம்சங்களைக் கொண்டதாகத் திகழும் நம் நாட்டில் சுற்றுலாத் தலங்களை அழகுற பராமரிப்பதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

கடந்த ஆண்டில் (1992) 18 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணியர் நம் நாட்டிற்கு வருகை புரிந்துள்ளனர். இத்துறை மூலம் ரூ.4,000 கோடி அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது.

# வாய்மையே வெல்லும்

கவிஞர் கரு. நாகராசன்





'வாய்மை வெல்லும்' என்றொரு பொன்மொழி
கோட்டையில் தெரிகிறது - அந்த
வாசகம் கூறிடும் தத்துவப் பொருள்நம்
நாட்டினில் புரிகிறது!

தூய்மை நேர்மை வாழ்வில் பெற்றவர்
நினைப்பது நடக்கிறது - இங்கு
துணிவே துணையாய்க் கொண்டவர் பின்னே
மலையும் நடக்கிறது!

ஆயிரம் பேர்கள் அடித்துக் கூறினும்
பொய்மைகள் வெல்வதில்லை - தம்மை
அழித்திடும் ஓநாய் காட்டிடும் வழியில்
ஆடுகள் செல்வதில்லை!

தேய்வது போலத் தெரிந்திடும்; ஆனால்
திரும்பவும் நிலவுவரும் - இந்த
தேசத்தில் எத்தனை சோதனை வரினும்
வெற்றியை நீதிபெறும்!

தூற்றுதல் ஒன்றே தொழிலாய்க் கொண்டோர்
எண்ணம் பலிப்பதில்லை - என்றும்
சுயநலக் காரார் காதினில் நேர்மைக்
கீதம் ஒலிப்பதில்லை!

போற்றுதல் செய்வோம் சத்திய வழியில்
புவியை ஆள்வோரை - அமைதிப்
பூங்கா வெனவே உலகை மாற்றிக்
காப்போம் வாழ்வோரை!

# தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை லிட்.,
# பேட்டை, திருநெல்வேலி-627 010

தந்தி: "COOPSPIN"
டெலக்ஸ்: 0433-232 SPIN IN.

தொலைபேசி எண்:

| | |
|---|---|
| ஆட்சியர் (தனி) | :23610 |
| ஆட்சியர் (இல்லம்) | :72899 |
| அலுவலகம் | :23284, 23285, 23286 |

நிறுவப்பட்ட கதிர்கள் - 50,080

எங்களது ஆலை தமிழகத்திலேயே கூட்டுறவுத் துறையில் முதன் முதலில் துவங்கப்பட்டது. தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் இதுவே பெரிய ஆலையாகும்.

20ஸ், 26ஸ், 40ஸ், 100ஸ், 2/17ஸ், 2/40ஸ், 2/60ஸ், 2/80ஸ் கார்டட் நூல் ரகங்களும் 60ஸ், 80ஸ் கோம்புடு நூல் ரகங்களும் மற்றும் கார்டட் ரகங்களில் கோன் நூல்களும் இங்கு உற்பத்தியாகி இந்தியா முழுவதும் விற்பனையாகின்றன.

ஆலை நவீனப்படுத்தப்பட்டு நூதன மின் சோதனைக் கருவிகளைக் கொண்டு ஒவ்வொரு நிலையிலும் மிகச் சிறந்த முறையில் தரக்கட்டுப்பாடு செய்யப்பட்டு நூல் விற்பனை செய்யப்படுகிறது.

போ. சோலைச்சாமி, எம்.ஏ., எம்.பி.ஏ.,
டி.பி.பி.ஏ.,
கைத்தறி மற்றும் துணிநூல் இணை இயக்குநர்

# குடியினால் விளையும் கேடு

கலைமாமணி ஆர்.சி. தமிழன்பன்





மதுவெனும் கொடிய மயக்கிடும் நச்சை
மதிமிகு இனிய மானிடர் குடிப்பதோ?

சான்றோர் பழிக்கும் சஞ்சலக் குடியை
சதமென எண்ணி நிதமும் குடிப்பதோ?

நல்வினை ஆற்றும் நம்உடல் உள்ளம்
தீவினைக் குடியால் சாவினை ஏற்பதோ?

சீயென உமிழ நாயினும் கேடாய்
சீரினை அழித்துச் சிறப்பினை இழப்பதோ?

குடியின் கேட்டினால் குடிகொளும் சோம்பல்
தடுமாற் றத்துடன் படுபயம் வாட்டும்

விழிகள் மங்கும் பழுதடை யும்செவி
பழிபல நேரும் பரம்பரை வீழும்!

பொறியின் உணர்வாம் புலன்கள் கெடும்நம்
அறிவின் ஆற்றல் அறவே அழிந்திடும்!

மூளைத் தண்டின் முகுளம் குலைந்து
மூலையில் என்றும் முடங்கும் ஜடமாய்!

நாளடை வினிலே நடுங்கும் உடலம்
நிலைதடு மாறும் கைகால் ஆடும்!

வாயும் குளறும் நாயும் உமிழும்
நோயின் 'நொம்பலில்' நிலைதடு மாறும்!

புதுமை காணும் பொறுமை போய்விடும்
பழமை மறக்கும் நிலைமை இறங்கும்

பேரருஞ் செல்வம் சீரழி வாகும்
நேரறி வாண்மை நெஞ்சம் குலையும்!

மதுவைக் குடித்தோர் மதியை இழந்தார்
மதுவைச் சுவைத்தோர் மதிப்பை இடித்தார்

குடிக்கக் குடிக்கக் குடும்பம் குன்றிடும்
துடிக்கத் துடிக்கத் துயரினில் சாவார்!

எதிரி என்றே இனம்தனைக் காட்டி
உயரிய வாழ்வை உடனே போக்கும்

நச்செனும் கொடிய விஷத்தை நம்பலாம்!
நிச்சய மரணம் நிகழ்த்திக் காட்டும்

திராவகம் தனையும் தீர்க்கமாய் நம்பலாம்!
திரியாத நட்பிலே பிரியாத பிணைப்பின்

நண்பன் போன்றே நடிக்கும் வஞ்சகப்
பண்பின் செயலே போதைமிகு மதுவாம்!

தவணை முறையில் உயிரை வாங்கும்
தரங்கெட்ட குடியைத் தானேற்கலாமோ?





## நூல் நயம்

### பாரதிதாசன் திருக்குறள் உரை ஆய்வும் பதிப்பும்

**ஆசிரியர்:** டாக்டர் ச.சு. இளங்கோ

**வெளியீடு:**

பாரி நிலையம்
184, பிராட்வே
சென்னை-108

பக்கம்:264 விலை:ரூ.32/-

**வா**ன்புகழ் வள்ளுவரின் திருக்குறளுக்கு, தமிழறிஞர்கள் பலர் உரை எழுதிச் சிறப்பித்திருக்கின்றார்கள். அந்த வகையில், பாவேந்தர் பாரதிதாசனாரும் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார். அவற்றின் அழகிய தொகுப்பே இது.

பாரதிதாசனாரின் வெளிவராத படைப்புகளை வெளிக் கொணரும் அரிய பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வரும் டாக்டர் ச.சு. இளங்கோவைப் பாராட்ட வேண்டும்.

திருக்குறளின் முதல் 85 குறளுக்குப் பாவேந்தர் எழுதிய உரை, திட்பமாகவும், நுட்பமாகவும் அதேசமயத்தில், தெளிந்த நீரோடை போன்றும் திகழ்கின்ற பாங்கினைப் படித்து மகிழலாம். நல்ல முயற்சி, நாடு வரவேற்குமாக!

### கன்னித் தமிழ் கவிதை பாடுவோம்

**ஆசிரியர்:** முனைவர் புரட்சிதாசன்

**வெளியீடு:**

பாண்டியன் பாசறை
17, வடக்கு போக்கு சாலை
தியாகராயநகர், சென்னை-17

பக்கம்:210 விலை:ரூ.40/-

**இ**ன்று கவிஞர்க்குப் பஞ்சமில்லை. புதிய புதிய கவிஞர்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் மிகச் சிறந்த கையேடாக இந்நூல் விளங்குகின்றது.

நூலாசிரியர் தாமே நூல் இயற்றி, தாமே உரையும் எழுதித் தக்க மேற்கோள்களும் காட்டிப் 'புரட்சி செய்துள்ளார். இளங் கவிஞர்க்கு இது ஒரு இலக்கண இலக்கியம்.

— மறைமலை

### 'சகல சக்தியளிக்கும் பகவான் பாபா'

**ஆசிரியர்:** மயிலைத் தொண்டன்

**வெளியீடு:**

கார்த்திகா பப்ளிகேஷன்
92, கங்கையம்மன் கோவில் தெரு
வடபழனி, சென்னை-600 026

பக்கம்:112 விலை:ரூ.15 -

"**சே**வை செய், எல்லோரிடத்தும் அன்பு செலுத்து" என்று உபதேசித்த பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா அவர்களுடைய அருளுரைகளாலும், நிகழ்த்திய அற்புதங்களாலும் ஈர்க்கப்பட்டு இவருடைய பக்தரானோர்கள் உலகம் முழுவதும் வியாபித்து உள்ளனர்.

இந்நூலும் அவருடைய வாழ்க்கை வரலாறு, அவர் வழங்கிய அருளுரைகள், அவர் நிகழ்த்திய அற்புதங்கள் ஆகியவற்றை விளக்குகிறது.

ஆன்மீக நாட்டம் கொண்டவர்களுக்கு மட்டுமல்லாது, அவரைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறவர்களும், மிகவும் பயன்படக் கூடிய கையேடு போன்று அமைக்கப்பட்டு, மனநிறைவைத் தருகிறது. பயனுள்ள நூல்.

என். குமாரசாமி

### பழமொழிகளில் பெண்மை

**ஆசிரியர்:** முனைவர் சரனா இராசகோபாலன்

**வெளியீடு:** ஒளிப் பதிப்பகம்

63, டாக்டர் ரங்காச்சாரி சாலை,
சென்னை-18.

பக்கம்:304 விலை:ரூ.38/-

பழமொழி இன்றைய வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருப்பதைப் பார்க்கிறோம். சண்டையாகட்டும், சமாதானமாகட்டும் அங்குப் பழமொழி எப்படியும் புகுந்துவிடும்! பொதுவாக, பழமொழிகள் வாழ்க்கைக்கு உதவுகின்றன என்றே சொல்ல வேண்டும். ஒருவனை இடித்துக் கூற, குற்றங் குறைகளைச் சுட்டிக்காட்ட நல்லதை வரவேற்க, பழமொழிகள் பாடமாக விளங்குகின்றன.

குறிப்பாக, பழமொழிகளில் பெண்மை குறித்து இந் நூலில் அலசியிருக்கிறார் நூலாசிரியர். ஒவ்வொரு பழமொழிக்கும் அவர் கூறும் விளக்கம் விரிவுரை எல்லாம் மனத்தில் நிற்கிறது. மாணவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் படித்து மகிழ வேண்டிய அருமையான நூல்.

— மறைமலை

### சிறுவர் சிறுமியர் வாழ்வு வளம்பெற...

**ஆசிரியர்:** டாக்டர் மு. முத்துக்காளத்தி

**விற்பனை உரிமை:** பாரி நிலையம்

184, பிராட்வே
சென்னை-108

பக்கம்:96 விலை:ரூ.12/-

**கு**ழந்தை ஒரு குளவி. கேள்வியால் கொட்டும், வண்டாகத் துளைக்கும். வகையாகப் பதில் சொன்னால்தான் பெற்றோர் பிழைக்க முடியும் - என்று இந்நூலாசிரியர் கூறுவது உண்மை தானே?

குழந்தைகளுக்கு ஏற்படும் சந்தேகங்களைச் சரியானபடி தீர்க்க வேண்டும். சிறுவர்-சிறுமியர்க்கு எந்தப் பருவத்தில், எதைஎதைப் பற்றி, எவ்வளவு தெரிவிக்க வேண்டும் என்பதையெல்லாம் மிக அருமையாக அழகாகக் கூறியிருக்கிறார் ஆசிரியர். கேள்வி-பதில் வடிவில் மருத்துவ ரீதியான பல கருத்துக்களைப் பக்குவமாகக் கூறியிருக்கும் பாங்கு பாராட்டுதற்குரியது. ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய நூல்.

### வெற்றிப் பத்து

**ஆசிரியர்:** தேவகோட்டை பஞ்சநாதன்

**வெளியீடு:**

புத்தகப் பூங்கா
52, அய்யம்பெருமாள் தெரு
சென்னை-14.

பக்கம்:147 விலை:ரூ.20/-

**வா**ழ்க்கையில் முன்னேறுவதற்கு, முன்னோர்களின் அனுபவ வாக்குகள் நம்மை முன்னேற்றும் படிகளாக அமைகின்றன. அந்த வகையில், இந்நூலாசிரியரின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு உதவிய அந்தப் பொன்மொழிகள் எவை? அதுதான் வெற்றிப் பத்து. கதைபோல, சுவைபட தன் அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார் ஆசிரியர். முன்னேறத்துடிக்கும் எல்லாத் திறத்தாரும் இந்நூலைப் படித்துப் பயன்பெறலாம்.

### சுற்றுப்புறச் சூழலும் ஆரோக்கிய வாழ்வும்

**ஆசிரியர்:** சூரியநாத்

**வெளியீடு:**

தமிழ்மணி பதிப்பகம்
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
சென்னை-94

பக்கம்:96 விலை:ரூ.13/-

**ம**க்கள் நல்வாழ்வுக்குப் பக்க பலமாகத் திகழ்வது சுற்றுப்புறச் சூழலாகும். மனிதன் உயிர் வாழத் தேவையான காற்று, நீர், உணவு இவை மூன்றும் சுத்தமாக இருத்தல் இன்றியமையாததாகும். இவற்றை எப்படிப் பாதுகாக்கலாம் என்பதற்கான காரண காரிய விளக்கங்களைக் கூறுகிறது இந்நூல்.

## இராமநாதபுரம் மாவட்டம்:




தமிழ்நாட்டிலுள்ள மிகவும் பின் தங்கிய மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டமும் ஒன்று. தொழில் ரீதியாகவும் மிகவும் பின்தங்கிய மாவட்டம் இது; இங்கே தொழிற்சாலைகள் என்று எதுவும் கிடையாது.


மாவட்டத்தில் மொத்தம் மூன்று கல்லூரிகள் மட்டுமே உள்ளன. இவற்றில் இரண்டு அரசுக் கல்லூரிகள், ஒன்று அரசு உதவி பெறும் பெண்கள் கல்லூரி. இம் மாவட்டத்தின் மக்கள் தொகை 11.50 இலட்சம். இதில் கல்வியறிவு உள்ளவர்கள் 52 சதவிகிதம். இது மாநிலக் கல்வி விகிதத்தை விட 10 சதவிகிதம் குறைவாகும். பெண்கள் கல்வியறிவு 38 சதவிகிதம் மட்டுமே ஆகும். மிகவும் பின் தங்கிய மாவட்டம் ஆதலால், கல்விக்கான சூழல் மிகவும் குறைவு. அதனாலேயே கல்வி கற்றவராய் இருக்க வேண்டும் என்பதற்கான தேவையும் இங்கே குறைவு.

இங்குள்ள மிகப் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தையும், மீன் படித்தலையும் தொழிலாகக் கொண்டு உள்ளனர். மிக நீண்ட 263 கி.மீ. கடற்கரையைக் கொண்டது. இம் மாவட்டம் வயிற்றுப்பாட்டை பார்ப்பதே மிகப் பெரிய சவாலாய்ப் போய்விட்ட கிராம மக்களிடையே எழுத்தறிவு இயக்கத்தை எடுத்துச் செய்வது மிகவும் தொல்லை என்ற எண்ணம் பலரிடமும் இருந்தது.

### அறிவொளி இயக்கம்

அறிவொளி இயக்கத்திற்கான பூர்வாங்க வேலைகள் 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து தொடங்க ஆரம்பித்தன. அப்போது, தமிழ்நாட்டில் ஏற்கெனவே பசும்பொன், காமராசர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை மற்றும் வட ஆர்க்காடு-அம்பேத்கர் ஆகிய ஏழு மாவட்டங்களில் அறிவொளி இயக்கம் நடைபெற்று வந்தது. ஒன்றாக இருந்த இராமநாதபுரத்திலிருந்து பிரிக்கப்பட்ட, பசும்பொன் மற்றும் காமராசர் மாவட்டங்களில் அறிவொளி, நடந்து கொண்டிருந்ததன் தாக்கம், இராமநாதபுரத்தையும் பாதித்தது; அறிவொளிக்கான கோரிக்கை மக்களிடையே எழுந்தது.

ஆனால், கூடவே இராமநாதபுரம் மாவட்டத்தில் இது நடக்குமா? என்ற சந்தேகத்தையும் சிலர் கிளப்பினர்.



### மாநாடுகள், பேரணிகள்

1991-ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் மாவட்டம் முழுவதும் ஒரு கண்ணோட்டக் கலைப் பயணம் நடத்தப்பட்டது. இது அறிவொளிக்கான ஆரம்ப எழுச்சியை அனைவரிடமும் ஏற்படுத்தியது.

முன்னோட்டக் கலைப் பயணத்தை அடுத்து, ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் மீனவர்கள், மாநாடுகளும், பேரணிகளும், மாவட்டம் முழுவதும் நடத்தப்பட்டன. இதன் மூலம் எழுத்தறிவு இயக்கத்திற்குத் தேவையான ஒத்துழைப்பும், ஆதரவையும் கற்றோர்களிடமிருந்து பெற முடிந்தது.

### ஒரு நாள் - கற்போர் சந்திப்பு இயக்கம்

சென்ற ஆண்டு ஏப்ரலில் மாவட்டத்திலுள்ள 2,30,000 வீடுகளில், தொண்டர் குழு சென்று, கற்போர் அனைவரையும் சந்தித்தது. 5 பேர்கள் கொண்ட 5,000 குழுவினர் ஒரே நாளில் அனைத்து வீடுகளுக்கும் சென்று கற்போர், தொண்டர் பற்றிய தகவல்களைச் சேகரித்தனர். அரசு அலுவலர்கள், தன்னார்வத் தொண்டர்கள், மாணவர்கள், இளைஞர்கள், ஆசிரியர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் என அனைத்துத் தரப்பினரும் இந்த ஒரு நாள் கணக்கெடுப்பில் கலந்து கொண்டது மாவட்டத்தில் மிகப்

பெரிய எழுச்சியை ஏற்படுத்தியது.

ஒவ்வொரு கிராமத்திலும் காலை 7 மணிக்கெல்லாம் குழுக்கள் கூடி அறிவொளிக் கொடி ஏற்றி பாட்டுப்பாடி கோஷமிட்டு, இந்தக் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டனர். இந்தக் கணக் கெடுப்பின் மூலம் மாவட்டத்தில் 11 இலட்சம் மக்கள் தொகையில் 10.8 இலட்சம் பேர்களை நேரடியாகச் சந்தித் தனர். இதன்மூலம் அறிவொளிப் பிரச் சாரம் நேரடியாக ஒவ்வொருவரையும் சென்றடைந்தது. 9 முதல் 45 வயதுக்குட்பட்ட கற்போர்கள் 2 இலட்சம் பேர்கள் எனக் கணக்கிடப்பட்டது. அறிவொளி மையங்களில் கற்றுக்கொடுக்க 20,000 தொண்டர்கள் தங்களது பெயர்

### கலைப் பயணங்கள்


ஒரு நாள் கணக்கெடுப்பு ஏற்படுத்திய பிரச்சாரப் புயலை அடுத்து, நடத்தப்பட்ட கலைப் பயணங்கள் இரண்டாவது பெரிய பிரச்சாரப் புயலாய் அமைந்தது; 15 கலைக் குழுக்கள், ஏப்ரல் - மே மாதங்களில், 30 நாட்கள் தொடர்ச்சி யாக ஒரு நாளைக்கு மூன்று கிராமங் களில், பிரச்சாரம் செய்தன. மாவட்டத் திலுள்ள 2136 கிராமங்களில் 1,858 கிராமங்களில் இந்தப் பிரச்சாரம் நடத்தப் பட்டது. இதன் பலன் கிட்டத்தட்ட 10 இலட்சம் பேர்களைச் சென்றடைந்தது. இந்தப் பிரச்சாரத்தின் மூலம் கற்போர் அனைவரும், மனரீதியாகத் தயார் செய்யப்பட்டனர். கற்றுக்கொடுக்க முன்

வொளி இயக்கம் சாதனை படைத்தது குறிப்படத்தக்கது.

### பயிற்சி முகாம்கள்

கற்போர் கண்டறியப்பட்டு, அவர்கள் மனரீதியாகத் தயார் படுத்தப்பட்டு விட்டனர். கற்றுக்கொடுக்கும் தொண்டர் களும் கண்டறியப்பட்டனர். அவர்கள் கற்போரிடையே அறிமுகப்படுத்தப்பட்ட னர். ஆனால் கற்பிப்பதில் இவர்கள் பயிற்சி இல்லாதவர்கள் ஆகவே இவர் களுக்கான பயிற்சி முகாம்கள் ஜூன் மாதம் முழுவதும் நடைபெற்றன.

20,000 தொண்டர்களுக்கான பயிற்சி முகாம்கள் 5 நாட்கள், 200 மையங்களில் நடைபெற்றன. இதற்கு



களைத் தன்னார்வத்துடன் பதிவு செய் துள்ளனர். 11.4.92 அன்று கிராமங் களிலும், தெருக்களில் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள், மாவட்ட அளவில் 13.4.92 அன்றெ ஒன்று சேகரித்துத் தொகுக்கப்பட்டது. இது, அறிவொளி வரலாற்றில் இல்லாத சாதனையாகும். அதேபோல் அறிவொளி திட்டப் பரி சோதனைகளை இந்தக் கணக்கெடுப்பின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதும், அறிவொளி வரலாற்றிலேயே முதல் முறை எனலாம்.

வந்த தொண்டர்கள் 20,000 பேர்களையும், இந்தக் கலைப்பயண மேடைகளில் அறிமுகப்படுத்தி உற்சாகப் படுத்தினர்.

15 வயதுக்குட்பட்ட சிலர், சிறுமி களைக் கொண்ட ஒரு குழு, மாவட்டம் முழுவதும் சென்று பிரச்சாரம் செய்து, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. சின்னஞ்சிறு பாலர்களைக் கொண்டு 30 நாட்களில் தொடர்ச்சியாகக் கலைப் பயணம் நடத்தி, இந்தியாவிலேயே முதன் முறையாக இராமநாதபுரம் மாவட்ட அறி

முன்பாக இந்தத் தொண்டர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான தலைமைப் பயிற்றுநர்கள் 1000 பேர்களுக்கும், இவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கான வல்லுநர்கள் 100 பேர்களுக்கும், இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான சிறப்பு வல்லுநர்கள் 20 பேர்களுக்கும், பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சி முகாம்களே திரு விழாக்கள் போல் இருந்தன. பங்கேற் பாளர்களது, ஆவலையும் தொண்டுள்ளத் தையும் தூண்டுவதாய் இருந்தது.



20,000 தொண்டர்களில் 15,000 தொண்டர்கள் 15-லிருந்து 25 வயதுக் குட்பட்ட இளம் பெண்கள் ஆவர். மிகவும் பின்தங்கிய கிராமப்புறக் கலாச் சாரத்தையும் கொண்ட பண்பாடு, பழக்க வழக்கம் 15,000 இளம் பெண்கள் சமுதாய நோக்கத்துடன் முன்வந்து, தேசியப் பணியில் ஈடுபட்டது என்பதை நினைக்கும்போது, இன்னும்கூட, நம்ப முடியாததாகவும், ஆச்சரியப்படத்தக்க தாகவும் உள்ளது.

## கற்பித்தல் பணி துவக்கம்

அனைத்தும் தயார், கற்போர், கற்றுக் கொடுக்கும் தொண்டர்கள், அறிவொளி யைச் செயல்படுத்தும் கிராமக் கமிட்டிகள், பஞ்சாயத்து அமைப்பாளர்கள் தயார்; எளிய விஞ்ஞான முறையில் கற்றுக் கொடுக்கப் பயிற்சியளிக்கப்பட்ட தொண் டர்கள், தயார்; பாடப்புத்தகங்கள், சிலேட்டு, பென்சில், எழுதுகுச்சி, சாக் பீஸ், கரும்பலகை என அனைத்தும் கிராமங்களுக்குப் போய்ச்சேர்ந்து விட்டன. வகுப்பகள் நடத்துவதற்கான, இடங்கள் தேர்வு செய்யப்பட்டு விளக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. கற்பிக்கும் பணி, துவக்கப்பட வேண்டியது ஒன்றுதான் பாக்கி.

ஆம். 2.7.92 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால், கற்பிக்கும் பணி துவக்கி வைக்கப்பட்டது. அன்று இரவு மாவட்டம் முழுவதும்16,000 மையங்களில் 1,72,000 கற்போர்கள் சேர்ந்தனர். முதல் பாடமான பட்டா... படி... மாவட்டம் முழுவதும் படிக்கப் பட்டது. எங்கு பார்த்தாலும், அறிவொளி வகுப்புகள் தெருவோரம், திண்ணை, தாழ்வாரம், போட்டன், மேடு, வயல் காடு என அறிவொளி பூக்கள் பூத்துக் குலுங்கின.

## விவசாயமும் - சாகுபடியும்

செப்டம்பர் மாதக் கடைசியில் கிட்டத் தட்ட 1.62 இலட்சம் பேர் அறிவொளி முதல் புத்தகத்தை முடித்தனர். இந்த நேரத்தில் தான் மாவட்டம் முழுவதும் நல்ல மழை பெய்தது. இந்த ஆண்டு விவசாயத்திற்குப் போதுமான மழை பெய்தது. மழையைக் கண்டுவிட்டால் சகலத்தையும் மறந்துவிடும் பழக்கம் கொண்ட இம்மாவட்டத்து மக்கள், இந்த ஆண்டு அறிவொளியையும் சேர்த்து மறந்தனர். உழுவதிலும் விதைப்பதிலும், களையெடுப்பதிலும், நாள் முழுவதும் கலைத்துப்போனவர்களுக்கு அறிவொளிப் புத்தகத்தை எடுக்க நேரமில்லாமல் போனது. வயிற்றுப்பாட்டைப் பார்ப்பதே முதல் வேலையாகவும் இறுதி வேலையாக வும் ஆகிப் போனது; ஆனாலும் அறி வொளித் தொண்டர்கள் விடவில்லை!

மழையிலும், சகதியிலும், இருட்டிலும்... பாதயாத்திரைப் பிரச்சாரம் மேற் கொண்டனர். 1000 தொண்டர்கள், மாவட்டம் முழுவதும் 66 குழுக்களாகப் பிரிந்து கொண்டு, 10 நாட்கள் தொடர்ச்சியாய் நடந்து சென்று மக்களை வயல்காட்டிலெல்லாம் சந்தித்துப் பேசி, அறிவொளிக்காக நாள்தோறும் அரை மணி நேரமாவது ஒதுக்க வேண்டுமெனக் கெஞ்சிக் கேட்டனர். இந்த முயற்சிக்குப் பயன் கிடைத்தது. நின்று போன மையங்கள் திரும்பச் செயல்படத் தொடங்கின. அறிவொளி தீபம்-2 அனைத்து மையங்களிலும் விநியோகிக்கப் பட்டது.

## எழுச்சிக் கலைப்பயணம்

1992-ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் எழுச்சிக் கலைப்பயணமும் நடைபெற்றது. விவசாய வேலைகளில் மூழ்கிப்போயிருந்த அறி வொளிக் கற்போருக்கு எழுச்சியூட்டு வதற்காக நடத்தப்பட்டது இது.

இம்முறை 12 கலைக் குழுக்கள் தொடர்ச்சியாக 30 நாட்கள் பிரச்சாரம் செய்தன. 1,525 கிராமங்களில் நிகழ்ச் சிகள் நடத்தினர்.

முழுவதும் பெண்களைக் கொண்ட ஒரு கலைக்குழு இம்முறை முழுவதும் பிரச்சாரத்தில் ஈடுபட்டது இன்னுமொரு முக்கியமான சாதனையாகும். இராமநாத புரம் மாவட்டத்தில் பெண்கள் கலைக் குழுவா? எனப் பலரும் வியந்தனர்.

## கற்றோர் தேர்வு எழுதினர்

அறிவொளி தீபம் முதல் புத்தகத்தை முடித்தவர்களுக்காகத் தேர்வு நடத்தப் பட்டது. இதற்குத் தேர்வு ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டனர். வயது வந்த கற் போர், எல்லாம் பள்ளிக் குழந்தைகள் போல், தெருவோரத்து விளக்கடியில் அமர்ந்து தேர்வு எழுதினர்.

1.62 இலட்சம் கற்றோர் இந்தத் தேர்வை எழுதினர். அதற்கடுத்து, இரண்டு

புத்தகங்கள் முடித்தவர்களுக்கான தேர்வை 1.5 இலட்சம் பேர் எழுதினர். தற்போது நடத்தப்பட்டு வரும் மூன்று புத்தகங்களைப் படித்து முடித்தவர்களுக்கான டி.9 என்னும் தேர்வை இதுவரை 75,000 பேர் எழுதியுள்ளனர். இன்னும் ஒரு வார காலத்திற்கும் மேற்கொண்டு 25,000 பேர்கள், எழுதி முடிப்பர். இவ்வாறாகக் குறியீடான 2 இலட்சம் கற்போர்களில் 1.72 இலட்சம் பேர்கள், அறிவொளி மையங்களில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் 1.62 பேர் முதல் புத்தகத்தையும் 1.5 இலட்சம் பேர், இரண்டு புத்தகங்களையும், ஒரு இலட்சம் பேர் மூன்று புத்தகங்களையும் நடத்தி முடித்துள்ளனர். இது அறிவொளி இயக்கம், எண்ணறிவு மற்றும் எழுத்தறிவு இயக்கத்தில் ஏற்படுத்திய சாதனையாகும். 1981-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்ட கல்வி அறிவு பெற்றோர் சதவிகிதம் 48. 1991-ஆம் ஆண்டு இது 52 ஆக உயர்ந்தது. ஆக 10 ஆண்டுகளில் 4 சதவிகிதம் மட்டுமே உயர்ந்தது. ஆனால் அறிவொளி இயக்கம், டந்த ஓராண்டில் மட்டும்ந 13 சதவிகிதம் பேரைக் கல்வியறிவு பெற்றவர்களாய் ஆக்கியது. தற்போது மாவட்டத்தில் கல்வியறிவு சதவிகிதம் 65 ஆகும்.

### அறிவொளியில் சமுதாயப் பாதிப்புகள்

அறிவொளி இயக்கம் எழுத்தறிவில் செய்த சாதனையைப் போலவே தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மற்ற பிரச்சினைகளிலும் தனது தாக்கத்தை ஏற்படுத்தியது. குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பது, இடைவெளியைக் குறைந்தது. குழந்தைகளின் கல்வித் திறனை அதிகப்படுத்தியது. ஆரம்பக் கல்வியிலும் குழந்தைகள் சுகாதாரம், பெண்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் போன்ற சுகாதாரப் பிரச்சனைகளிலும், சிறு குடும்பம், சிறுசேமிப்பு சத்துணவு தேச ஒற்றுமை, பெண் சமத்துவம் மற்றும் மதச் சார்பின்மை போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சமுதாயப் பிரச்சினைகளிலும், மக்களின் பங்கேற்பை அதிகப்படுத்தி உள்ளது. பிரச்சாரங்கள், கலைப் பயணங்கள், மாநாடுகள், பேரணிகள், பயிற்சி முகாம்கள், கண்காட்சிகள், விவாதங்கள் கல்விச் சுற்றலா மூலங்கள் இவைகள் சாதிக்கப்பட்டன.

### பெண்கள் மேம்பாட்டு அமைப்பு 'மகரம்'

வறுமையும், எழுத்தறிவின்மையும் ஒரு நாணயத்தில் இரண்டு பக்கங்கள் ஆகும்.



★ ஒரு சமூகம் என்றிருந்தால் அச் சமூகத்தில் ஏழைகள் இல்லாமலும், மனச்சாட்சியை விற்றுப் பிழைப்பவர்கள் இல்லாமலும் செய்வதுதான் சரியான சமூகச் சீர்திருத்த வேலையாகும்.

- தந்தை பெரியார்

அறிவொளி இயக்க மையங்களில் சேர்ந்து எழுத்தறிவு பெற்ற 1.72 இலட்சம் பேரில் 1.42 இலட்சம் பேர், வறுமைக்கோட்டிற்கும் கீழ் உழன்று கொண்டிருக்கம் கிராமப்புற விவசாயக் கூலிப் பெண்கள் மற்றும் நகர்ப்புறக் கூலித் தொழிலாளிப் பெண்கள் ஆவர். அறிவொளி மையங்களில் பத்துப் பத்துப் பேர்களாகச் சேர்ந்து படிக்க ஆரம்பித்த இந்தப் பெண்கள் குழுக்களாய்ச் சேர ஆரம்பித்தனர்.

இவ்வாறு ஒவ்வொரு கிராமத்திலும், நகர்ப்புறப் பகுதியிலும் இந்தப் பெண்கள் குழு இயற்கையாக உருவாக ஆரம்பித்தது. இவர்கள் தங்களுக்குள் கலந்து பேசி, தங்கள் பிரச்சினைகளைப் பற்றி அலச ஆரம்பித்தனர். நாளடைவில் இவர்களுக்குள்ளும், இனக்கமான ஒரு உறவு வளர ஆரம்பித்தது. இவ்வாறு மாவட்டம் முழுவதும் உருவான இந்தக் குழுவினரெல்லாம், 'மகரம்' என்ற அமைப்பின் கீழ் அழைப்பு ரீதியாக்கப்பட்டனர்.

இன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய அமைப்பு இதுவேயாகும். அதிலும், விவசாயக் கூலிப் பெண்களையும், நகர்புறப் பெண் தொழிலாளிகளையும் கொண்ட இந்த அமைப்பு போல், வேறு எந்த அறிவொளி மாவட்டத்திலும் கிடையாது எனலாம். 5.3.92 அன்று இந்த மகரம் அமைப்பின் துவக்கவிழா நடைபெற்றது. இந்த விழாவில் 10,000 பெண்கள் கலந்து கொண்டனர். அறிவொளியில் சேர்ந்து எண்ணறிவு, எழுத்தறிவு கற்றுக்கொண்ட இந்தப் பெண்கள் இன்று அமைப்பு ரீதியாகத் திரண்டு தங்களது சொந்தக் கால்களில் நிற்பதாகத் தொழில் முனைவோராகவும், பெண் சமத்துவத்தை நிலைநாட்டப் பாடுபடுவோராகவும், விழிப்புணர்வு பெற்று வருகின்றனர். அறிவொளியின் சாதனைகளில் இதுவே முக்கியமானதாகும்.

### அறிவொளி நிறைவு விழாக்கள்

அறிவொளி இயக்கத்தின் முதல் கட்டம் முடிவுறும் தருவாயை எட்டி உள்ளது. இம்மாதம் முழுவதும், கிராம அளவில் மாவட்டத்திலுள்ள 2,136 கிராமங்களிலும் அறிவொளி நிறைவு விழாக்களும், தொடர் அறிவொளி தொடக்க விழாக்களும் நடைபெறும்.


அதனைத் தொடர்ந்து ஒன்றிய அளவு விழாக்களும், மாவட்ட விழாவும் நடைபெறும் கிராம அளவிலான விழாக்களில் தொண்டர்கள் பாராட்டப்படுவதும், கற்போர்கள் பாராட்டப்படுவதும், தொண்டருக்கும், கற்போருக்கும், சான்றிதழ்கள், வழங்கப்படுவதும், அறிவொளி சாதனைகள் கிராமந்தோறும், விளக்கப்படுவதும், தொடர் அறிவொளி பொறுப்பாளர்கள் அறிமுகப்படுத்தப்படுவதும் நடைபெறும்.

### தொடர் அறிவொளி இயக்கம்

அறிவொளி இயக்கத்தைத் தொடர்ந்து தொடர் அறிவொளி இயக்கம் 2 ஆண்டுகள் நடைபெறும். அறிவொளி இயக்கத்தில் விடுபட்டுப் போனவர்கள் இடையில் நின்றவர்கள், முழுத்திறனை எய்தாதவர்கள் அனைவரும் தொடர் அறிவொளியில் நிறைவு செய்யப்படுவர்.

பிறர் சொல்லிக்கொடுத்து, கற்றுக் கொண்ட நிலையிலிருந்து தானாக் கற்றுக்கொள்ளும் நிலைக்கு, கற்போர் உயர்த்தப்படுவர். அதோடு சேர்ந்து தொழிற் கல்விக்கான பயிற்சி அனைவருக்கும் ஆரம்பக்கல்வி. அனைவருக்கும் அடிப்படைச் சுகாதாரம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், பெண் சமத்துவம், கல்வி நூலகம், நிலை நிறுத்தத்தக்க வளர்ச்சி ஆகிய இயக்கங்களில் மக்களது ஈடுபாட்டை உறுதிப்படுத்தி தற்சார்பு மிக்கதாய் சொந்தக்காலில் நிற்கக்கூடியதாய் வெளித்தாக்குதலைத் தாங்கி, நிலைத்து நிற்கக் கூடியதாய்... கிராமங்களை வளர்ச்சி பெறச் செய்யத் தொடர் அறிவொளி இயக்கத்தில் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இல. கிருட்டிணன், இ.ஆ.ப., அவர்கள் சீரிய முயற்சிகள் எடுத்து வருகிறார்.

**நா. தில்லைகோவிந்தன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம்**



# என்னுடைய குரு!

காந்திஜியின் மேஜைமேல் மூன்று-குரங்குப் பொம்மை வைக்கப்பட்டிருந்தது. ஒருநாள் ஒருவர், 'இது ஏன் இங்கு வைக்கப்பட்டுள்ளது? என்று கேட்டார்.

'இவை மூன்றும் என் குரு' என்று பதிலளித்தார் அடிகள். பின் சொன்னார், "எனக்குச் சரியாக நினைவில்லை. பல ஆண்டுகளுக்குமுன் சீன நண்பர் ஒருவர் இதை மகாதேவ் தேசாயிடம் கொடுத்திருந்தார். பின் இது அவரிடமிருந்து என்னிடம் வந்தது. மேலான, உயர்ந்த, நீதிகள் சீனப் பண்பாட்டில் இன்றும் அழியாது இருக்கின்றன. உயர்ந்த தத்துவத்தைக் கூறுகிறது இந்தப் பொம்மைகள். 'ஒரு பொழுதும் பொய் பேசாதே, எவரையும் பழிக்காதே, என்ற நீதியைச் சொல்லும் வகையில் முதல் குரங்கு வாயை மூடிக் கொண்டு உள்ளது. இரண்டாவது குரங்கு தன் கண்ணைப் பொத்திக் கொண்டுள்ளது. இது கண்களால் 'தீயதைப் பாராதே' என்று அறிவுறுத்துகிறது.

மூன்றாவது குரங்கு என்ன சொல்லுகிறது தெரியுமா? என்று மறுபடியும் பேச்சைத் தொடர்ந்தார். 'தீயசெயலையும் தீயசொற்களையும் கேளாதே' என்கிறது அக்குரங்கு. எத்துணை உயர்ந்த கோட்பாடு இது! செவியைத் தீயவழிக்குத் திருப்புவது மனிதனின் அமைதியைக் குலைக்கிறது. மேலும், உள்ளத்தை மன்னிக்க இயலாத குற்றத்திற்கு இழுத்துச் செல்கிறது. நம் எல்லோருக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது'.

நான் இவ்விளையாட்டுப் பொம்மையை, கலையோடு கூடியது என்று கருதுகிறேன். இதன் புறவடிவம் மட்டும் அழகானதல்ல. மறைந்திருக்கும் தத்துவமும் மனித இனத்திற்குப் பயனளிக்கும் மனித சமுகத்தை முன்னேற்றாத கலையையும், மனிதனுக்கு நன்மைதராத கலையையும், கலையென்று சொல்ல முடியாது. கலை மனத்தைத் தூய்மைப்படுத்தி ஆன்மாவையும் தூய்மையாக்குகிறது. நான் இந்த குரங்குகளை அறிவுப்பூர்வமாகவே குரு என்று கருதுகிறேன். அவைகளை நான் செல்லும் இடங்களுக்கெல்லாம் எடுத்துச் செல்லுகிறேன். அடிக்கடி எனக்குப் பாடம் கற்பிக்கின்றன".

— நன்றி:
காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்

## ஒழுக்கம் பயில வேண்டும்!

வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் முதலியவற்றைப் பயின்றாலும், பயிலாவிட்டாலும் எனக்குக் கவலையில்லை. முக்கியமாக ஒழுக்கம் பயில வேண்டும். இதுதான் என் விருப்பம். நான் ஒருக்கால் மனிதனுக்கு அடிமையாவேன்; ஆனால், மனத்திற்கு ஒருபோதும் அடிமைப்பட மாட்டேன். அப்பாவத்தைவிடக் கொடுமையானது வேறொன்றுமில்லை. நீங்கள் நன்கு பயின்று கட்டுப்படுத்துங்கள்.



சத்தியம், உண்மை என்று சொல்லிக்கொண்டு அடக்கம் இல்லாமல் போனால், கர்வத்திலும் அகம்பாவத்திலுமே முடியும். அடக்கத்தோடு உண்மையைக் கடைப்பிடித்தால்தான் வாழ்க்கை அழகுபெறும். இல்லாவிடில் நல்ல சித்திரத்துக்கும், குறும்புக் கோணல் சித்திரத்துக்கும் உள்ள பேதத்தைப் போலவே ஆகும்.

# பொம்மைக் கொலு

சின்னஞ்சிறிய விரல்கள்! சித்திரம் படைக்கின்றன; வாழ்க்கைச் சித்திரமும் வரைகின்றன; அதுமட்டுமா? விசித்திரமான வேலைப்பாடுகளையும் உருவாக்குகின்றன.

கல்லிலே கலைவண்ணம்!
மண்ணிலே மலைக்கும் வண்ணம் தெய்வத் திருவுருவச் சிலைகள்!



கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய் அமையும் கண்காட்சி ஒன்றை அண்மையில் பார்த்தபோது, இந்த மண்ணின் மகிமை தெரிந்தது!

ஆம். சென்னை குறளகத்தில் 'காதிகிராப்ட்' அமைத்துள்ள பொம்மைக் கண்காட்சிதான் அது!

குறளகத்தில் நுழையும்போதே, நம்மை வருக வருகவென வரவேற்பவை, வண்ண பொம்மைகளே!

நவராத்திரிக் கொலுவை முன்னிட்டு, நவநாகரிகமாக உருவாக்கப்பட்ட சிறிய பெரிய பொம்மைகள் காட்சியில் இடம் பெற்றிருப்பதுடன், நம் இதயத்திலும் இடம் பெற்று விடுகின்றன. அத்தனை நேர்த்தியும் நுணுக்கமும் நிறைந்தவைகளாக அவை காணப்படுகின்றன.

தமிழகக் கைவினைஞர்களின் கற்பனைக்கும், கைவண்ணத்துக்கும் சாட்சியம் கூறும் வண்ணம் அவை புன்னகை பூக்கின்றன.

அழகிய மலர்கள், மரஞ்செடி கொடி வகைகள், காய்கறிகள், தெய்வத் திருவுருவச் சிலைகள், தேசியத் தலைவர்கள், விலங்கினங்கள், பறவைகள் இப்படி பல்வேறு வகையான பொம்மைகளைப் பார்க்கும்போது, அவற்றையெல்லாம் வாங்க வேண்டும் என்கிற பேராசையே நம் மனத்தில் எழுகின்றது!

ஒவ்வொரு ஆண்டும் பொம்மைக் கொலுவின்போது சிறப்பு வகையாகப் பொம்மைகளை- அதாவது பொம்மைத் தொகுதிகளை வெளியிடுவது வழக்கம். அதன்படி, இவ்வாண்டும் பொம்மைத் தொகுதிகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவை- தீபாவளி, இராமர் பட்டாபிஷேகம்,



வைகுண்டம், கைலாசப் பருவதம், திருமணம், கோபியர் நடனம், ஆதி சங்கராச்சாரியார் தவம், அரச மரம், ஐயப்பன், தசரதர் தர்பார், அஷ்ட லட்சுமி, பழனி ஆண்டவர், ஆறுபடை வீடு, காமாட்சி அம்மன் விளக்கு, பள்ளிக் கூடம், கிரிக்கெட் பாம்பாட்டி, சந்திரலேகா, மிருகக் காட்சிச்சாலை, ராஜராஜேஸ்வரி, தொலைக்காட்சி, கருட சேவை.



இவையெல்லாம் நம் வீட்டுப் பொம்மைக் கொலுவில் இடம் பெற்றால் எப்படி இருக்கும்?

மண், காகிதக் கூழ், நுணி, மரம், உலோகம், கண்ணாடி ஆகியவற்றிலான பொம்மைகள் இந்தக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

அதோ, ஓரிடத்தில் காய்கறிகள், பழங்கள் குவிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். உடனே போய் "கத்தரிக்காய், கிலோ எவ்வளவு?" என்று கேட்பதற்குள், "இவை மெழுகினால் ஆன காய்கறிகள், சார்!" என்றதும் நாம் மூக்கின்மேல் விரலை வைக்கிறோம். அத்தனைத் தத்ரூபமாகச் செய்யப்பட்டிருக்கிறது அவை. தக்காளி, கேரட், ஆரஞ்சு இப்படி எல்லாமே




அதே நிறத்தில், இயற்கையாய் விளைந்ததைப் போலவே தோற்றமளிக்கின்றன.

இதேபோல பெரிய அளவில் உள்ள தெய்வத் திருவுருவச் சிலைகளைப் பார்க்கும்போது, கோயிலில் இருப்பது போன்ற பிரமையே ஏற்படுகிறது.

கண்ணாடிக் குச்சியில் செய்யப்பட்ட மான், விநாயகர் முதலானவை கைவினைஞரின் கைத்திறனுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் இந்தப் பொம்மைகளெல்லாம் எங்கிருந்து தருவிக்கப்படுகின்றன?



நல்ல ஊதியம் கிடைப்பது இந்தச் சந்தர்ப்பத்திலேதான். அதாவது, கிராமத்தில் வாழும் ஏழை எளிய கைவினைஞர்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்திட, இம்மாதிரியான பொம்மைக் கொலுக் கண்காட்சிகள் பெரிதும் உதவியாய் இருக்கின்றன.

இந்தக் கண்காட்சியில் ரூ.10 முதல் ரூ.1,500 வரை விலையுள்ள பொம்மைகள் விற்பனைக்குக் கிடைக்கின்றன. இவ்வாண்டு பொம்மைகள், ரூ.28 இலட்சத்துக்கு விற்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

கலை நுணுக்கம் வாய்ந்த இப் பொம்மைகளை, அழகுப் பொருளுக்காக மட்டுமல்லாது, நவராத்திரிப் பண்டிகையின்போது கொலு வைக்கவும் வாங்கிச் செல்கின்றார்கள்.

இந்த அழகிய கண்காட்சி 13.9.93 அன்று தொடங்கியது. 23.10.93 வரை இது நடைபெறும் என்பதால், நாமெல்லாம் பார்ப்பதற்கு நிறைய வாய்ப்பிருக்கிறது.



சென்னை, காஞ்சிபுரம், கடலூர், விருத்தாசலம் முதலான ஊர்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இவை தயாரிக்கப்பட்டு கண்காட்சியில் இடம்பெறுகின்றன.

ஆண்டு முழுவதும் தயாரிப்பதிலேயே ஈடுபட்டிருக்கும் பொம்மைக் கைவினைஞர்களுக்கு, கண்காட்சியின் மூலம் நல்ல வருவாய் கிடைக்கிறது. உழைப்புக்கேற்ற



ஆடவர், மகளிர், குழந்தைகள் என்று அனைவரையும் மகிழ்விக்கும் இந்தப் பொம்மைகள் நம் வீட்டை அலங்கரிக்கின்றன. அதே சமயம், அவற்றை வாங்குவதன் மூலம் நம் நாட்டின் பொருளாதாரமும் உயர்கின்றது. இத்தொழிலில் ஈடுபட்டு வரும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரமும் உயர்கின்றது. இவற்றின் மூலம் வறுமைக் கோட்டின் சுவடும் அழிக்கப்படுகின்றது.

'கைத்தொழில் களை நாம் மெத்தவும் பரிவுடன்
காப்பது நம்முடைக் கடனாகும்;
எத்தனை ஏழையின் நித்திய ஜீவனம்
எண்ணுவ தேவெகு புண்ணியமாம்!'

— என்று நாமக்கல் கவிஞர் கூறிய வாக்கின்படி, கைத்தொழிலை வளர்ப்போம்; அவற்றைக் கண்ணாய்க் காப்போம் என்கிற தூளுரையை நாம் ஒவ்வொரு பொம்மைக் கொலுவன்றும் எடுத்துக் கொண்டாலே போதுமே! கைவினைஞர்கள் கைபிசைய வேண்டியதில்லையே!

—'கிரிஜா

# குறளின் குரல்

சாமி பழனியப்பன்

தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பம்மிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் புரிந்து - நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நானும்
வீழ்வேன் என்று நினைத் தாயோ?

என்றார் கவியரசர் பாரதியார். ஆம், ''பாரதியார் பிறந்தார் - வாழ்ந்தார் - மறைந்தார்'' என்று கூறும் அளவிலேயா அவர் வாழ்க்கை மறைந்தது? அவரது வாழ்க்கை மேற்கூறிய முப்பிரிவுகளுக்குள்ளே அடங்கி இருக்குமாயின், இவ்வுலகில் பிறந்து இறந்த பெரும் பான்மையினரின் பட்டியலில் பாரதியாரின் பெயரும் ஒன்றாகச் சேர்ந்து, காற்றோடு காற்றாக மறைந்திருக்கும். ஆம். அவர் பெயரும் எரிந்து கருகிவீழும் விண்வீழ் கொள்ளியாக ஆகியிருக்கும்.

ஆனால், செயற்கரிய செய்து, சிறப்புப் பெற்ற பாரதியார் விண்ணிலே மிதந்துவரும் வெண்ணிலவு போல, இன்றும் நம் மனத்திலே நின்று நிலவுகிறார், கவிதையெனும் கவினுருவிலே, இப்படித்தான் செய்தற் கரிய செய்த பெரியோர்களெல்லாம் - சான்றோ ரெல்லாம் இறந்தும் இறவாதவராய் புகழுடம்போடு மின்னிப் பொலிகின்றனர்.

''உலகில் புகழ்வளர வறுமையடைதலும், புகழை நிலைநிறுத்திச் சாதலும் வித்தகர்க்கு அல்லால் மற்ற வர்கஞ் அரிதாம்; புகழ் பெற்றோர் அவர் இறந்தாலும் அவர் பெற்ற புகழ் நிலைத்து நிற்கும்'' என்பது திருக்குறள்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வையகமும் அவ்வழியில் வாழ்ந்து சிறக்க, அரும்பெரும் ஒளி விளக்காக - கலங்கரை விளக்கமாக விட்டுச் சென்ற திருவள்ளுவரின் எண்ணக் கோவையாக அவர் விட்டுச் சென்ற திருக்குறள் - இறந்தும் இறவாமல் புகழோடு வாழுகிற வள்ளுவரை வைத்துப் பெருமக்கள் உள்ளங் களிலே நின்று ஒளிரும் ஒளிவிளக்காக ஆக்கிக் காத்து வருகிறது என்பதிலே இருவேறு கருத்தில்லை.

திருக்குறள் ஒரு மொழியினர்க்கோ, ஒரு நாட் டினர்க்கோ - ஒரு சமயத்தினர்க்கோ உரிய நூல் அன்று - திருவள்ளுவர் அத்தகைய 'ஒட்டைச் சாண்' உள்ள முடையவர் அல்லர். அவர் உலகத்தினரையே எண்ணி னார் - உலகின் மக்களையே சிந்தித்தார். மனித நேயத்தைப் பற்றியே கவலைப்பட்டார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' - 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற விரிந்து பரந்த விழுமிய கருத்தின் கொள் கலமாகவே விளங்கியது அவரது உள்ளம்.

இத்தகைய விரிந்து - பரந்து விளங்கிய திருவள்ளு வரின் உள்ளத்தினின்றும் உதித்த திருக்குறள் உலகப் பெருநூலாக - உலக மக்கட் சமுதாயத்திற்கென் விளங்கும் ஒரு நூலாகத் திகழ்வதில் வியப்பில்லையன்றோ? இவ்வாறு, உலகத்தையே சிந்தித்த - ஓங்கிய இமயம் போல வளர்ந்த அந்தப் பெரும்புலவரின் எண்ணக் குவியலை உலகம் உவந்து வரவேற்காமல் இருக்க முடியுமா? அப்புலவர் பெருமகன் எந்நாட்டைச் சார்ந்தவராயிருந்தாலென்ன? அந்நூல், எம்மொழியில் இருந்தாலென்ன?

வள்ளுவத்தால், வள்ளுவத்தைத் தந்த திருவள்ளுவ ரால், தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் வான்புகழ் கிடைத் திருக்கிறது.

இதையே,

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

என்று பெருமிதத்தோடு பாடி மகிழ்ந்தார் கவியரசர் பாரதியார்.

ஆம். என் மகன் நல்லவன் - புகழாளன் என்று அவனைப் பெற்றெடுத்த தாய் கூறிக் கொண்டிருப்பதை விட, 'அவன் சான்றோன்' என்று மற்றவர்கள் பாராட்டுவதுதானே சிறப்பு? திருக்குறளைக் கற்றுத் தேர்ந்து தெளிந்து - பாராட்டிய பிறநாட்டு நல்லறிஞர் களும், கலைஞர் பெருமக்களும் ஏராளம் ஏராளம்! 'இச்சுவை தவிர வேறு எச்சுவை பெறினும் வேண்டேன்' என்றவர்கள் நிறைய உள்ளனர். அதன் பயனே திருக்குறள் உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உலகில், சமயச் சார்பற்ற ஒரு நூல் உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது என்றால் அந்நூல், திருக்குறளே!

இவ்வாறு பலவேறு நாட்டினரும் பாராட்டிப் போற்று கின்ற திருவள்ளுவரின் பெருமையையும், அவர் இயற்றி அருளிய திருக்குறளின் சிறப்பையும் உணர்ந்து திருக்குறட் பாக்களைக் குற்ற மறக் கற்று, கற்ற வழி நின்று ஒழுகி மனித குலம் சிறப்பு எய்தும் நாள் எந்நாளோ அந்நாளே இம்மண்ணுலகம் விண்ணுலகமாக மாறும் மனித குலத்தை வாழ்வாங்கு வாழ வைக்கும் திருவள்ளுவரின் சிந்தனைகள் நம் சிந்தனைக்குரியன.

''வள்ளுவர்செய் திருக்குறளை
மறுஅறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுஆதி
ஒருகுலத்துக் கொருநீதி''

என்ற வரிகளின் மூலம் வள்ளுவத்தின் சிறப்பையும், திருவள்ளுவரின் நேர்மைத் திறனையும் வலியுறுத்துகிறார் மனோன்மணீயம் வழங்கிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.

"தருமர் மணக்குடவர்
தாமத்தர் நச்சர்
பரிமே லழகர்
பரிதி - திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள்
காளிங்கர் வள்ளுவர்நூற்கு
எல்லை யுரைகண்டா
ரிவர்"

என்கிற வெண்பா, திருக்குறளுக்கு உரை செய்த பழைய நூலாசிரியர் பதின்மர் என வரையறுத்துக் கூறும். இவர்களுக்குப்பின், திருக்குறளுக்கு உரை காணும் முயற்சியில் ஈடுபட்ட அறிஞர் பெருமக்கள் ஏராளம் ஏராளம். இதுகாறும் திருக்குறளுக்கு வெளிவந்த உரைகள் எண்ணற்றன. எனினும், திருக்குறளுக்கு வெளிவந்துள்ள உரைகள் பலவற்றிலும் - பலவற்றுள்ளும் இன்றும்கூட பரிமேலழகர் உரையே சிறந்ததெனப் புலவர் பெரு மக்களும் பிறரும் போற்றிப் புகழ்கின்றனர்.

"பாலெல்லாம் நல்லாவின்
பாலாமோ? பைந்தமிழர்
நூலெல்லாம் வள்ளுவர்செய்
நூலாமோ - நூலின்
பரித்த உரையெல்லாம்
பரிமே லழகர்
தெரித்த உரையாமோ
தெளி"

என்ற சிறப்புப் பாயிரம், பரிமேலழகர் உரைச் சிறப்பை வலியுறுத்துவதாகும்.

பரிமேலழகர் உரை, மற்றப் பலரின் உரைகளிலும் சிறந்தது - நயம் பல காட்டும் நல்லுரை என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆயினும், பரிமேலழகர் உரை முற்றிலும் குற்றமற்ற ஒரு உரை என்று கூற முடியாது - அறிவுலகச் சான்றோர் ஒப்புக் கொள்ளவும் இல்லை.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல், 'ஆகா! பரிமேலழகர் உரையிலா குற்றம் காண்பது என்று பாய்ந் தெழுவதோ, பரிமேலழகர் உரையில் குற்றமே இருக்க முடியாது என்று கூறுவதோ, பரிமேலழகர் சொன்னது தான் சரி என்று சாதிப்பதோ சரியாகாது - அறிவுடைமை யாகாது. அதுபோல, பரிமேலழகர் தவறுதான் செய் திருக்கிறார் என்று தெளிவாக அறிந்த பின்னும் அதை ஒப்புக் கொள்ளாமல் இடம் பிடிப்பதோ நியாயமுமல்ல - நேர்மையல்ல. பரிமேலழகர் செய்த தவறை உய்த் தறிந்தும், பரிமேலழகர் மீதுள்ள பக்தியால் பாசத்தால் கதை மறைத்து வைப்பதோ, அறுவை மருத்துவம் செய்து குணப்படுத்த வேண்டிய - புரையோடிய புண்ணை புனுகிட்டு மூடிவைப்பது போன்றது.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்று வள்ளுவரே கூறியிருக்கிறாரே! அப்படியிருக்க உரையாசிரியரான பரிமேலழகரின் உரையில் ஐயப் படுவதோ, அதில் தவறு இருப்பதை எடுத்துக் காட்டு வதோ எப்படிக் குற்றமாக முடியும்?



உயிர்களிடத்தில்
அன்பு
வேணும்!

மெய்ப்பொருளைக் காணவேண்டுமானால், தன் உயிரைப் போலவே பிற உயிர்களைக் காணவேண்டும். அற்ப ஜீவன்களையும் தன் உயிரைப்போலவே மதிக்க வேண்டும். நம் உயிரில் நாம் வைத்துக்கொண்டிருக்கும் பற்று பிற உயிர்களிடம் ஜீவகாருண்யமாகப் பரிமளிக்க வேண்டும்.

இனி, பரிமேலழகர் உரையில் சிற்சில தவறுகள் நிகழ்ந்தமைக்கு அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' (972) என்ற கொள்கை உடைய திருவள்ளுவர் ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்று எங்கும் பேசியிருக்க முடியாது. அத்தகைய வள்ளுவப் பெருந்தகையின் அறத்தை விளக்க வந்த பரிமேலழகர், 'மனுமுதலிய நீதி நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்' என்று கூறுகிறார். இத்தகைய கொள்கை வரையறையாலேயே பரிமேலழகரின் உரை யில் தவறுகள் ஏற்பட்டுள்ளன.

அடுத்து, பரிமேலழகர் உரையில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டி மறுத்துரைத்த புலவர் பெருமக்களும், சான்றோர்களும் அவ்வப்போது தோன் றாமல் இல்லை. எடுத்துக்காட்டாக,

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்'

என்ற குறட்பாவை எடுத்துக் கொள்ளலாம். இந்தக் குறட்பாவுக்கு உரை காணப் புகுந்த பரிமேலழகர், 'கேட்டதாய்' என்ற சொற்றொடர்க்குச் சிறப்புரை கூறுகையில், 'பெண்ணியல் பால் தானாக அறியாமையின் கேட்ட தாய் என்றார்' என்று கூறுகிறார். இதனை நாம் ஒப்ப முடியுமா?

பண்டைத் தமிழகத்தில் நுண்மாண் நுழைபுலமிக்க பெண்பாற் புலவர் பலர் வாழ்ந்தனர் என்பது வரலாறு உணர்த்தும் உண்மை. ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், குறமகள் இளவெயினி, பாரி மகளிர், பூதப் பாண்டியன்தேவி, மாறோக்கத்து நப்பசையார், வெண்ணிக் குயத்தியார், காமக்கண்ணியார் இப்படி எத்தனை எத்தனையோ பெண்பாற் புலவர்களை இலக்கியத்தில் காண்கிறோம். அவ்வாறிருக்க, 'பெண்ணியல்பால் தானாக அறியாமை யின்' என்ற பரிமேலழகர் கூற்றை ஒப்புக் கொள்வது அறிவுடைமையாகுமா? சிவப்பிரகாசமுனிவர் என்னும் செம்மைசால் பெரியார், அன்றே பரிமேலழகர் கூற்றை மறுத்துப் பாடியிருப்பதையும் காண்கிறோம்.



தூய இலக்கியம் பிறந்திட...

நமது இலக்கியங்களில் பெண்களை அளவுக்கு மீறி மேன்மைப்படுத்திப் பேசுகின்ற பகுதிகளும் உண்டென்று நான் கேள்விப்படுகிறேன். இப்படிப் போலி மேன்மை அளிப்பது தவறான போக்காகும். எளிய கேள்வியொன்றை உங்களைக் கேட்கிறேன். பெண்களைப் பற்றி எழுத முயலும்போது, எந்த நோக்கத்துடன் நீங்கள் அவர்களை எண்ணிப் பார்க்கிறீர்கள்? காகிதத்தில் பேனாவைக் கொண்டு எழுதத் தொடங்கும் முன், பெண்ணை உங்களுடைய பெற்ற தாயைப் போல எண்ணிக் கொள்ளுங்கள். அப்படி எண்ணினால், தாகத்தினால் தவிக்கும் பூமிக்கு எங்ஙனம் வானத்திலிருந்து மழை கிடைக்கின்றதோ, அதேபோல உங்கள் எழுதுகோலிலிருந்தும் மிகத் தூய இலக்கியம் பிறக்கும்.

''கற்றார் அறிகுவர் மக்கள்தம்
வேறெனக் கட்டுரைத்த
சொற்றான் ஒருபெண் ஒழித்ததென்
பாரொடு தொல்லுலகில்
நற்றாண் மகற்பெறு கென்றுஆசி
சொல்பவர் நாணஉனைப்
பெற்றான் மலையரையன் குன்றைவா
ழும்பெரி யம்மையே!''

என்று மறுத்திருக்கிறார் சிவப்பிரகாசமுனிவர்.

இனி,

'அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை' (37)

என்ற குறட்பாவை எடுத்துக் கொள்ளலாம். இக் குறட்பாவுக்கு உரையெழுதிய பரிமேலழகர்,

''அறத்தின் பயன் இது என்று யாம் ஆகம அளவை
யான் உணர்தல் வேண்டா; சிவிகையைக் காவு
வானொடு செலுத்துவா னிடைக் காட்சியள
வை தன்னானே உணரப்படும்''

என்றார்.

அதாவது, அறத்தின் பயன் இதுவென நூல்கள் பலவற்றையும் நுண்ணிதாக ஆராய்ந்து தெளிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை; பல்லக்கில் ஏறிச் செல்வோனையும், அந்தப் பல்லக்கைத் தூக்கிச் செல்வோனையும் கண்டு தெளியலாம் என்பது பரிமேலழகர் கருத்து. இன்னும் தெளிவாகக் கூறினால், 'பல்லக்குச் சுமப்பவன் அறத்தை மதிக்காதவன் - அப்பல்லக்கில் செல்வோன் அறஞ்செய்தோன்' என்றாகும்.

அன்று, திருப்பாணாழ்வாரைத் தோளிலே சுமந்து கொண்டு, திருவரங்கச் சாலை வழியிலே நடந்து சென்ற லோகசாரங்க முனிவரும், திருஞான சம்பந்தரின் பல்லக்கினைத் தோளிலே சுமந்து சென்ற திருநாவுக்கரசரும் அறத்தை மதிக்காத மாபாவிகளா? ஒப்புக்கொள்வோமா?

இன்னும்,

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற''

என்று அறம் காட்டும் வள்ளுவர்,

''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்''

என்று பேசுகிற வள்ளுவரா வெறும் புறச் செயல்களைக் கொண்ட அறத்தை வலியுறுத்துவார்? இது பொருந்துமா?

மேலும்,

''அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடையே - மறுத்தார்தம்
பத்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து''

என 'நால்வர் நான்மணி'ப் பாடல் ஒன்று பரிமேலழகர் உரையை வெளிப்படையாகவே தெளிவாகவே மறுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு, வேறுபட்டும் மாறுபட்டும் பரிமேலழகராலேயே உரை வகுக்கப்பெற்ற குறட்பாக்கள் பல. இதர உரையாசிரியர்களும், அவரவர்தம் விருப்பத்திற்கும், ஆற்றலுக்கும் தக்கபடி குறட்பாவிற்கு உரை வகுத்துள்ளனர்.

வள்ளுவரின் குறட்பாக்களுக்கு உரையெழுதும் போது, உரையாசிரியர் பலர் தத்தம் உள்ளங்களையும், அவற்றின் உயரங்களையும் காட்டுவதில் முனைந்து நின்றதாலேயே அவர்கள் வள்ளுவர் உள்ளத்தினை, குறட்பாவின் சரியான விளக்கங்களைக் காட்டத் தவறிவிட்டனர்.

எனவே, உரைகள் பல வள்ளுவரின் தெள்ளிய உள்ளத்தினை எடுத்துக்காட்டத் தவறிவிட்டன. எனவே, உரைகள் சில இடங்களில் உரையாகவும், திரையாகவுமே விளங்குகின்றன. எனவே, காய்தல் உவத்தல் இரண்டும் இல்லாமல், நடுநிலை நின்று குறட்பாக்களை ஆராய்ந்தால், வள்ளுவர் உள்ளத்தைத் தெளிவாக உணரலாம் - தெளிவாக உணர்த்தலாம். அப்போதுதான், நாம் வள்ளுவர் உள்ளத்தினை-திருக்குறள் சிந்தனைகளைப் புரிந்து கொண்டவர்களாவோம்.

# ஆர்க்காடு நவாபுகளும் அவர்களது நாணயங்களும்

**1698**-ஆம் ஆண்டில் தென்னாட்டைக் கைப்பற்றிய ஔரங்கசீப், ஐதராபாத்தில் 'நிஜாம்' என்ற பெயரில் ஒரு அதிபரையும், கர்நாட்காவில் 'நவாப்' என்ற பெயரில் ஒரு அதிபரையும் நியமித்து நவாப் நிஜாமுக்குக் கட்டுப்பட்டவராக இருக்க வேண்டும் என்ற நியதியையும் ஏற்படுத்தினார்.

கல்பிக்கர்கான் என்ற ஔரங்கசீப்பின் தளபதி முதன் முதலில் கர்நாடக நவாபாக நியமிக்கப்பட்டார். அவருக்குப் பின் தாவூக்கான் கர்நாடக நவாபாக நியமிக்கப்பட்டார். இதுவரை 'செஞ்சி' தலைநகராக இருந்தது - ஆனால் தாவூக்கான் ஆர்க்காட்டைத் தலைநகராக்கினார். 1712-இல் கர்நாடக நவாப் என்பவரே இதன் காரணமாக நாளடைவில் ஆர்க்காடு நவாப் என்று அழைக்கப்பட்டார்

1707-இல் ஔரங்கசீப் காலமானார். சதத்துல்லாகான் 1710-இல் கர்நாடக நவாபானார். இவரே சுதந்திர முஸ்லீம் நவாபானார்.

இவரைத் தொடர்ந்து தோஸ்த் அலி (கி.பி.1732-1740), சப்தர் அலி (கி.பி.1740-1742), முகமது சையது (கி.பி.1742-1744), அன்வருதின்கான் (கி.பி.1744-1749), முகமதலி, வாலாஜா - (கி.பி.1749-1795), உம்-தத் உல் உமாரா, வாலாஜா (கி.பி.1795-1801), அசிம்-உத்-தௌலா, வாலாஜா (கி.பி.1801-1819), அக்ம்ஜா, வாலாஜா (கி.பி.1825), குலாம் கௌஸ்கான், வாலாஜா (கி.பி.1825-1855) ஆகியோர் ஆர்க்காடு நவாபுகளாக ஆட்சிபுரிந்தனர். அன்வருதின் காலத்திலிருந்து நேவாயத்களின் ஆட்சி முடிவுற்று வாலாஜா பட்டத்துடன் ஆட்சி செய்தனர்.

சுல்பிக்கர்கான் காலத்திலிருந்து நவாபு காசுகளைப் புழக்கத்தில் விட்டாலும் அவர்களது பெயரில் எவ்விதக் காசுகளும் வெளியிடவில்லை. அன்வருதின் காசு வெளியிட்டான். காசின் முன்பக்கத்தில் கொடி ஒன்றும், கொடிக்குள் சூரியன் பிறை ஆகிய சின்னங்களும், கொடியின் கீழ் ஐந்து புள்ளிகளும், பின் பக்கத்தில் அன்வருது என்று தமிழில் பொறிக்கப்பட்ட செப்புக் காசுகள் பல கிடைத்துள்ளன. அவரது மகனான முகமதலி வாலாஜா - ஏறத்தாழ நாற்பத்தாறு ஆண்டுகள் நவாபாக ஆட்சி செய்தார்.


அவரது காலத்தில் (கி.பி.1749-1795) வா-வாலா-வாலாஜா என்ற அராஹபி மொழியிலும், தமிழிலும் பொறிக்கப்பட்ட செப்புக்காசுகள் ஆர்க்காடு, கடுபா, மெட்ராஸ், திருவள்ளூர், மதுரை, நட்டர் நகர், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவாமூர் ஆகிய இடங்களிலிருந்து வெளியிடப்பட்டன. கி.பி.1792-இல் மட்டும் 55,772 ஆர்க்காடு ரூபாய்களையும், 66,772 பாண்டிச்சேரி ரூபாய்களையும் வெளியிட்டுள்ளார். வெள்ளி நாணயங்களையும், வெளியிட்டுள்ளார். பின்னர் ஆர்க்காடு ரூபாய்களுடன் இருபது, பத்து, ஐந்து, இரண்டரை செப்புக் காசுகளையும் நவாபுகள் பெயரில் கிழக்கிந்தியக் கம்பெனியார் வெளியிட்டனர். இவற்றின் ஒருபுறம் பாரசீக மொழியில் காசின் மதிப்பும், மறுபுறத்தில் தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் காசின் மதிப்பும் பொறிக்கப்பட்டிருக்கும்.

நவாப் உம்-தத்-உல் உமாரா இறந்தவுடன் கர்நாடகத்தில் ஆட்சிப் பொறுப்பையும் கிழக்கிந்தியக் கம்பெனியாரே ஏற்றுக் கொண்டனர். அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த அஜிம்-உத்-தௌலா பெயரளவிலேயே நவாபாக இருந்தார். கி.பி.1803 முதல் ஒருபுறம் கம்பெனியின் சின்னத்துடனும் ஆண்டு பொறிக்கப்பட்டதும் மறுபுறம் காசின் அளவைப் பாரசீக மொழியிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டதுமான செப்புக் காசுகள் வெளியிட்டார்.

சமீபத்தில் ஆர்க்காடு டெல்லி கேட் அருகில் ராணிப்பேட்டையைச் சார்ந்த அப்துல் அக்கீம் கல்லூரி வரலாற்றுத்துறை மாணவர் என். சோமு என்பவர் 1803-இல் வெளியிடப்பட்ட செப்புக் காசைக் கண்டுபிடித்து வேலூர் அருங்காட்சியகத்தில் ஒப்படைத்தார். அதில் கிழக்கிந்தியக் கம்பெனி 1803 என்ற ஆங்கில வாசகத்துடன் அவர்களது சின்னமும் பின்புறம் 'ஐந்து காஸ், ஒரு ஃப்லூசுக்குச் சமம்' எனப் பாரசீக மொழியிலும் அதன் கீழ் 5 காஸ் என ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம் அம்பாசமுத்திரத்தைச் சார்ந்த மருத்துவ டாக்டர் டி. சங்கரநாராயணன் என்பவர் சேகரித்த ஆர்க்காடு நவாபுகள் வெளியிட்ட சுமார் நூறு செப்பு நாணயங்களை வேலூர் அருங்காட்சியகக் காப்பாட்சியர் டாக்டர் வே. ஜெயராஜூடன் ஆய்வை முன்னிட்டு ஒப்படைத்துள்ளார். ஆர்க்காடு நவாபுகள் பற்றிய பல்வேறு உண்மைகளை ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. அராபிக் வாசகத்தைப் படிப்பதில் வேலூர் அராபிக் கல்லூரியில் பணியாற்றும் திரு பித்வி, திரு குல்சார் அகமது, திரு சபீக் அகமது ஆகியோர் உதவி வருகிறார்கள்.

**காப்பாட்சியர்,**
**அரசு அருங்காட்சியகம்,**
**வேலூர்.**



**பிறர் நம்மை எவ்வண்ணம் நடத்தவேண்டும் என்று விரும்புகிறோமோ அவ்வண்ணமே பிறரை நாமும் நடத்த வேண்டும்.**

**— அண்ணல் காந்தியடிகள்**

## மாணவர் பக்கம்:




சிறுகச் சிறுகச் சேமிக்கப் பழகு
செழிப்பான வாழ்வுக்கு அதுதான் அழகு.

சேமிப்போர் வீட்டில் செல்வம்
பெருகும்
செலவாளி வீட்டில் கடனே பெருகும்.

சிறு முயலும் குட்டி போடும்
சேமிக்கும் பணமும் வட்டிபோடும்.

சேமிக்க வழிகள் பலவுண்டு
சேமித்து வந்தால் பலன் உண்டு.

சேமிக்கத் தூண்டும் தேன்கூடு
சேமிப்போர் வாழ்வே பூக்காடு.

சிந்திக்கத் தெரிந்தவன் மனிதனாவான்
சேமிக்கத் தெரிந்தவன்
செல்வனாவான்.

கட்டாயம் சேமிக்கப் பழகிக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்.

கட்டை வண்டிக்குக் கடையாணி தேவை
கட்டாயச் சேமிப்பு வாழ்வுக்குத் தேவை.

உடுக்கை இழந்தவன் கை ஒடிஉதவும்
உண்மையில் சேமிப்பு கூடி உதவும்.

விதைநெல்லைச் சேமிப்பவன்
விவசாயி
வீண்செலவைத் தவிர்ப்பவன்
அறிவாளி.

சேமிக்கச் சேமிக்க இன்பமயம்
செலவிட்டு அழிப்பது துன்பமயம்.

சேமிப்பு செல்வருள் உய்க்கும்
செலவதிகம்
பூமியில் தாழ்த்தி விடும்.

— பல்லவன்

### கல்வியின் நோக்கம்



வாழ்க்கையில் வெற்றிபெறுவதே கல்வியின் நோக்கம் என்று கருதுவது தவறு. வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம்.

முதலில் தொண்டு, பின்பு தன்னலம் என்ற மனப்பக்குவம் அனைவரிடமும் ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் நல்ல சமுதாயம் உருவாகும்.

— டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்

# அறிவுச் சுடர்

இந்தியாவில் உள்ள நீளமான ஆற்றுப் பாலம் - பாட்னாவிலுள்ள மகாத்மா காந்தி பாலம்.

உலகில் யானைகளின் நகரம் என்று அழைக்கப்படுவது - சயாம்.

யமுனை ஆறு எங்குள்ளது?

இந்தியாவில் டெல்லியில் அமைந்துள்ளது.

ஹாலந்து நாட்டின் புதிய பெயர் என்ன? - நெதர்லாந்து.

உலகிலேயே மிகப்பெரிய பாலை வனம் - வடஆப்பிரிக்காவைச் சார்ந்த சகாரா பாலைவனமாகும். மொத்தப் பரப்பு 84 இலட்சம் ச.கி.மீ.

உலகில் காப்பி அதிகம் விளையும் நாடு பிராசில். உலகில் பருத்தி அதிகம் உற்பத்தியாகுமிடம் - சீனா. உலகில் அதிகமாக மீன் பிடிபடும் இடம் - ஜப்பான்.

உலகில் பட்டு உற்பத்தியில் முதலிடம் வகிப்பது - ஜப்பான்.

ஆயிரம் ஏரிகள் உள்ள நாடு பின்லாந்து.

காற்று மண்டலத்தில் மிகுதியாக உள்ள வாயு - நைட்ரஜன்.

அமெரிக்காவை சேர்ந்த ஆர்வில் வில்பர்ரைட் 1903-ஆம் ஆண்டு ஆகாய விமானத்தைக் கண்டறிந்தார்.

இரத்த ஓட்டத்தைக் கண்டு பிடித்தவர் வில்லியம் ஹார்வி.

உலகில் கிரிக்கெட் விளையாட்டு முதன்முதலாக இங்கிலாந்தில் தோன்றியது உலகிலேயே மழையே பெய்யாமல், கடந்த 400 ஆண்டுகளாக உள்ள பகுதி சிலி நாட்டில் உள்ள அட்டகாமா.

உலகில் அதிகம் கம்பளி உற்பத்தியாகுமிடம் - ஆஸ்திரேலியா. உலகில் தங்கம் அதிகம் கிடைக்குமிடம் தென் ஆப்பிரிக்கா.

இந்தியாவிலுள்ள மிக பெரிய நீர்மின் திட்டம் - பக்ராநங்கல். மிகவும் ஒளியுள்ள கிரகம் - சுக்கிரன் (வீனஸ்).

நைல் நதியின் நன்கொடை என்று அழைக்கப்படுவது எந்நாடு - எகிப்து.



# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

**233, N.S.C. Bose Road, Madras-600 001.**

**Rate of Interest on Deposits**
**(Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

# தோற்றமும் வளர்ச்சியும்

வி.டி. துரைராஜ், இ.ஆ.ப.,
தலைமைச் செயல் அலுவலர்

'இந்தியா கிராமங்களில் வாழ்கிறது!' என்றார் அண்ணல் காந்தியடிகள். பாரம்பரியம்மிக்க நம் நாட்டின் நூல்நூற்பு, துணி நெசவு மற்றும் பல்வேறு கலைநுட்பம் வாய்ந்த கிராமத் தொழில்கள் 200 ஆண்டுக் கால ஆங்கிலேயர் ஆட்சியில் நசிந்து போயின.


நம் நாட்டில் விளைந்த பஞ்சு இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே அது ஆலைகளில் துணிகளாக நெசவு செய்யப்பட்டு மீண்டும் இந்திய மக்களிடமே விற்பனை செய்யப்பட்டது. இதனால் இந்திய மக்கள் வேலை வாய்ப்பினை இழந்ததோடு, இந்தியப் பொருளாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

கிராம மக்கள், குறிப்பாக ஏழை எளிய மக்கள் போதுமான உடையும், வேலை வாய்ப்பும் இன்றி வறுமையில் சிக்கித் தவித்தார்கள். இந்நிலை கண்டு ஆழ்ந்து சிந்தித்து அண்ணல் காந்தியடிகள் இராட்டை மூலம் நூற்பதும், கதர்த் துணிகளை உற்பத்தி செய்வதும் நசித்து போன கிராமத் தொழில்களுக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டி வளர்ப்பதும் தான் ஏழை எளிய மக்களுக்கு உற்ற துணையாக அமையும் என்று ஆணித்தரமாக நம்பினார். அவரே முன்வந்து இராட்டையில் நூற்பதோடு நாட்டு மக்களையும் பெரும் அளவில் நூற்புத் தொழிலில் ஈடுபடுத்தி, கதர் துணியையும் உற்பத்தி செய்யுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார். இதனால் கைராட்டையைக் கண்டு அரசு சுதந்திரப் போராட்டக் காலத்தில் அச்சம் அடைந்தது.

அண்ணல் காந்தியடிகளின் அறைகூவலுக்கு நாட்டு மக்கள் அனைவரும் பேராதரவு அளித்தனர். தமிழ்நாட்டு மக்களும் கதர்த் தொழிலை வளர்ப்பதில் மகாத்மா காந்தியடிகளுக்கு உறுதுணையாக நின்றனர்.

1921-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21-ஆம் நாள் மதுரைக்கு காந்தியடிகள் வருகை தந்தபொழுது, உடுக்கப் போதுமான உடைகளின்றி இலட்சக்கணக்கான மக்கள் வயல்களிலும், வழியெங்கிலும் அவதியுற்றதைப் பார்த்துக் கண்கலங்கி மனம் வருந்தினார். அன்று முதல் தான், முழு ஆடை அணிவதைக் களைந்து, தம் இடையில் ஒரு துண்டு மட்டும் அணிவது என்று உறுதி எடுத்துக் கொண்டார். அவ்வாறு உறுதி எடுத்துக் கொண்டு அண்ணல் காந்தியடிகள் அரை ஆடை உடுத்திய - மதுரை மேலமாசி வீதியில் உள்ள கட்டடம், ஒரு நினைவுச் சின்னமாகத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினால் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அந்தக் காலத்தில் மூதறிஞர் ராஜாஜி, தந்தை பெரியார் போன்ற தலைவர்கள் கதர் உற்பத்திக்காகவும், கதர் விற்பனைக்காகவும் அரும்பாடுபட்டுள்ளார்கள். சுதந்திரப் போராட்டக் காலத்தில் கதர் மீது பற்றுள்ளவர்களால் நிறுவப்பட்ட கதர் வாரியத்திற்குத் தந்தை





பெரியார் அவர்கள் தான் முதல் தலைவராக இருந்துள்ளார்.

ஆங்கிலேய ஆட்சி முடிந்து இந்தியா சுதந்திரமடைந்தவுடன் தமிழ்நாடு அரசு கதர் முன்னேற்றத்திற்காக ஒரு தனித் துறையை ஏற்படுத்தியது. தமிழ்நாடு அரசின் இந்த முயற்சிக்காக அண்ணல் காந்தியடிகள் தன்னுடைய பாராட்டுகளை வழங்கியுள்ளார். காந்தியடிகள் தம் பாராட்டுரையில் ''அனைத்து மாநில ஆட்சி அமைப்புகளிலும், கதர் வளர்ச்சிக்காக ஒரு திட்டத்தை ஏற்படுத்தியதில் சென்னை அரசு பெருமைப்படுகிறது'' என்று தமிழ்நாடு அரசையே பெருமைப்படுத்திப் பாராட்டியுள்ளார்.

தொடக்கத்தில் கிராமப் பகுதியில் பிர்க்கா வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கதர் திட்டம் செயல்படத் தொடங்கிப் பின்னர் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு பகுதியாக இணைந்தது. தமிழ்நாட்டில் கதர் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் மிக வேகமாக வளர்ந்து வந்ததால், 1956-ஆம் ஆண்டு கதருக்காக தமிழ்நாடு அரசு ஒரு தனித் துறையையே ஏற்படுத்தியது. மைய அரசு 1956-ஆம் ஆண்டு அகில இந்திய கதர் கிராமத் தொழில் ஆணையத்தை, பம்பாயைத் தலைமை இடமாகக் கொண்டு நிறுவியது. அதன் அடிப்படையில், 1.4.1960 முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தோற்றுவிக்கப்பட்டது.

1960-ஆம் ஆண்டு இவ்வாரியம் தொடங்கப்பட்ட காலத்தில், கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி ரூ.110.50 இலட்சமாகவும், விற்பனை ரூ.102 இலட்சமாகவும் இருந்தன. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் நிதி உதவியையும், தமிழக அரசின் நிதி உதவியையும் பெற்றுப், படிப்படியாக கதர் கிராமத் தொழில் வாரியம் தமிழ்நாட்டில் வளர்ச்சியடைந்துள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்கள், கதர் கிராமத் திட்டங்களை, தம் ஆட்சிக் காலத்தில் போற்றி வளர்த்தார். பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தம் ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், அகில இந்திய அளவில் மற்ற மாநிலங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு வளர்ச்சி அடைந்தது. அகில இந்தியாவிலேயே கதர் கிராமத் தொழில் திட்டங்களைத் தன் நேரடி நிர்வாகத்தில் செயற்படுத்திக்கொண்டு வருவது, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தான் என்பது குறிப்பிடத் தக்கது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் கதர் கிராமத் தொழில் திட்டங்கள் அகில இந்திய அளவில் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளன. புரட்சித்தலைவி அவர்களின் காலத்தில் கதர் கிராமத் தொழில் ஆணையம் வழங்கும் நிதியுதவியுடன் தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்களான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், சிறப்புக் கூட்டுத் திட்டம், கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டம், பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டம், மலைவாழ்வு மக்கள் மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத்தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம், பகுதி-2 திட்டம் ஆகிய அரசின் சிறப்புத் திட்டங்களின் மூலம், ஏராளமான நிதியுதவி, கதர் கிராமத் தொழில் வாரியத்திற்குத் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில், அரசின் நிதியுதவியுடன் பல புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், விற்பனை நிலையங்களும் தொடங்கப்பட்டுள்ளன. கதர் கிராமத் தொழில் வளர்ச்சிப் பணிகள், புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் மிகப் பன்மடங்காக விரிவடைந்துள்ளன.

அகில இந்திய கதர் கிராமத் தொழில் ஆணையம், கதர் தொழிலோடு கூட 96 கிராமத் தொழில்களின் வளர்ச்சியைச் செயற்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில் 57 தொழில்களை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயற்படுத்தி வருகிறது. இந்தத் தொழில்கள்,

1. இவ்வாரியத்திற்குச் சொந்தமான தொழில் அலகுகள்.

2. இவ்வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற் கூட்டுறவு சங்கங்கள்.

3. இவ்வாரியத்தின் நிதியுதவி பெறுகின்ற தனி நபர்கள், கைவினைஞர்கள்

ஆகிய மூன்றடுக்கு நிலைகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

கதர்த் திட்டங்கள், பனைத் தொழில், வெல்லம் மற்றும் கண்டசாரி சர்க்கரை எண்ணெய், தேனீ வளர்த்தல் உண்ணா எண்ணெய் மூலம் தயாரிக்கப்படும் சோப்பு வகைகள் (சலவை சோப்பு, மற்றும் குளியல் சோப்பு), டிடர்ஜென்ட் சோப்பு வகைகள், தானியம்-பருப்பு வகைகளைப் பயன்படுத்துதல், மட்பாண்டத் தொழில் மற்றும் செங்கல் தயாரித்தல், தச்சுத் தொழில் மற்றும் கருமாரத் தொழில், தோல் பொருள்கள் தயாரிக்கும் தொழில், நார் தயாரித்தல், பிரம்பு மூங்கில் தொழில், அலுமினியப் பாத்திரங்கள் தயாரித்தல், அகர்பத்தி தயாரித்தல், சீயக்காய்த் தூள், பற்பொடி, நீலகிரி தைலம், எலுமிச்சைப் புல் தைலம் தயாரித்தல் போன்ற பல கிராமத் தொழில்கள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் மேலும் பல புதிய தொழில்கள் கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ்ச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. செயற்கை

வைரம் பட்டைத் தீட்டுந் தொழிலுக்கென, 12 கூட்டுறவுச் சங்கங்கள், இந்த ஆட்சிக் காலத்தில் புதிதாகத் தொடங் கப்பட்டுள்ளன. மின் அணு உற்பத்தித் தொழிலுக்காக 7 கூட்டுறவுச் சங்கங்கள் இந்த ஆட்சிக் காலத்தில் புதிதாக அமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

1990-91-ஆம் ஆண்டிலிருந்து, 1992-93-ஆம் ஆண்டு வரை புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றிய விவரங்களைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் மூலம் அறியலாம்.

1990-91-ஆம் ஆண்டு கதர் உற்பத்தி ரூ.20.29 கோடி, கிராமத் தொழில் உற்பத்தி ரூ.241.94 கோடி, வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்பு பெற்றுள்ளோர் 9.99 இலட்சங்கள், 1991-92-ஆம் ஆண்டு கதர் உற்பத்தி ரூ.22.80 கோடி, கிராமத் தொழில் உற்பத்தி ரூ.270.40 கோடி, வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்பு பெற்றுள்ளோர் 10.83 இலட்சங்கள், 1992-93-ஆம் ஆண்டு கதர் உற்பத்தி ரூ.26.50 கோடி, கிராமத் தொழில் உற்பத்தி ரூ.298.71 கோடி, வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்பு பெற்றுள்ளோர் 11.83 இலட்சங்கள்.

ஒவ்வோராண்டிலும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேற்றம் அடைந்துள்ளதை, மேற்க்கண்ட புள்ளி விவரங்களி லிருந்து தெளிவாக அறியலாம். புரட்சித் தலைவி அவர் களின் வழி காட்டுதலுடன், அகில இந்திய அளவில் சிறப்பானதொரு இடத்தைத் தமிழ்நாடு அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

1991-92-ஆம் ஆண்டிற்கான புள்ளி விவரங் களின்படி, அகில இந்திய அளவில் தமிழ்நாடு, கதர் உற்பத்தியில், உத்திரப்பிரதேசத்திற்கு அடுத்தபடியாக 2-வது இடத்தையும், கிராமத் தொழில் வளர்ச்சியில் மகாராட்டிரம், உத்திரப்பிரதேசம் ஆகியவற்றிற்கு அடுத்த படியாக மூன்றாவது இடத்தையும் வகிக்கிறது. வாரியக் கூட்டமைப்பில், இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் எடுத்துக் காட்டாகவும், முன்னோடியாகவும் செயற்பட்டு வருகிறது.

கதர்த் தொழிலில் சிறிய அளவில் இருந்துவந்த கதர்ப் பட்டு உற்பத்தி இந்த ஆட்சியின் காலத்தில் பன்மடங்கு அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டுகளில் குறிப்பாக 1990-91-ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி ரூ.804.04 இலட்சமாகவும், 1991-92-இல் ரூ.924.84 இலட்சமா கவும், 1992-93-இல் ரூ.1263.64 இலட்சமாகவும் இருந்தது. இதனை மேலும் விரிவுப்படுத்திட 1993-94-ஆம் ஆண்டிற்கான கதர் பட்டு உற்பத்தியின் இலக்கை ரூ.1500 இலட்சமாக உயர்த்தி இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

முன்னர் 179 கதர் அங்காடிகள் மட்டுமே செயற் பட்டு வந்தன. இன்று தமிழகமெங்கும் 206 கதர் அங்காடிகள் செயற்பட்டு வருகின்றன. மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில், இந்த ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மிகப் பெரும் பங்காற்றி வருகிறது. மொத்த வேலைவாய்ப்பில் மகளி ருக்கு மட்டும் 4,44,870 வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு, முறையே 2,45,076 பேருக்கும், 13,117 பேருக்கும் இந்த ஆட்சியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப் படுகிறது. இந்த ஆட்சியின் காலத்தில் நூற்போர் மற்றும் நெய்வோருக்கு 15 சதவிகிதம் கூலி உயர்வு செய்யப் பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதனால், 34,500 நூற்போரும், 6,750 நெய்வோரும் பயனடைந்து வரு கின்றனர்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு, கதர் கிராமப் பொருட்களுக்கு வரி விலக்கு, பட்டு, பஞ்சு மற்றும் நிலக்கடலை கொள்முதல் செய்யும் இடத்தில் விற்பனை வரி விலக்கு, இம்மாநிலத்தின் வெளியிலிருந்து கொள்முதல் செய்யும் பொருட்களுக்கு 4 சதவிகித வணிக விற்பனை வரிச்சலுகை, அரசின் தேவைகளுக்கு சரி சமவிகிதத்தில் கதர் மற்றும் கைத்தறி துணி கொள்முதல் ஒதுக்கீடு போன்ற பல சலுகைகளைப் புரட்சித் தலைவி அவர்களின் அரசு வழங்கி வருகிறது. அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள், வாரியங்கள் தங்கள் தேவைகள் அனைத்தையும் கதர் கிராமத் தொழில் வாரியத்திலிருந்து வாங்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்களின் அரசு ஆணையிட்டிருப்பதன் மூலம், அதிக அளவில் கதர் கிராமத் தொழில் பொருட்களை உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும் அதன் பயனாக வேலைவாய்ப் பினை மேலும் அதிகரிக்கவும் வழிவகை செய்யப் பட்டுள்ளது. இதனால் இவ்வாரியத்தின் வளர்ச்சி வேகம், மேலும் பன்மடங்கு அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் தமிழ்நாட்டில் தான் அதிக அளவில் பனை மரங்கள் உள்ளன. ஏறத்தாழ 5 கோடி பனை மரங்கள் தமிழகத்தில் உள்ளன. பனைத் தொழிலின் மூலம் இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. உண்ணும் பொருட் களாகிய பதநீர், பனஞ் சர்க்கரை, பனங்கற்கண்டு, பனைவெல்லம், பனைமிட்டாய் வகைகள் மற்றும் உண்ணாப் பொருட்களாகிய பனை நார், தூரிகை, பனை ஓலைப் பொருட்கள் முதலியவை உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன.

பனைத்தொழில் மூலம் அதிக அளவில் அன்னியச் செலாவணி ஈட்டப்படுகிறது என்பது சிறப்பான



செயற்கை வைரம் பட்டை தீட்டுதல்



# ஓங்கி வளரும் பீங்கான் தொழில்

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த விருத்தாசலத்தில், தமிழ்நாடு அரசு அமைத்துள்ள பீங்கான் தொழிற்சாலை உலகப் புகழ் பெற்றதாகும்.

பீங்கான் தொழிலுக்குத் தேவைப்படும் வெள்ளைக் களிமண் - நெய்வேலி, பண்ணுருட்டி, திண்டிவனம் போன்ற பகுதிகளிலேயே கிடைக்கின்றது; இதற்கான மற்ற மூலப் பொருட்கள், சேலம், திருச்சி, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டங்களிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் இங்கே கொண்டுவரப்படுகின்றன.

தட்டுகள், 'கப்'புகள், பூந்தொட்டிகள் மட்டுமல்ல; தலைவர்கள், கடவுளர்களின் திருவுருவங்களும் கூட இங்கே அற்புதமாகத் தயாரிக்கப்பட்டு வண்ண மெருகூட்டப்படுகின்றன.

இவை - வெளி மாநிலங்களுக்கு மட்டுமல்ல; வெளி நாடுகளுக்கும் இங்கிருந்து அனுப்பி வைக்கப்படுகின்றன; பீங்கான் தொழில் மேம்பட - பலருக்கு விருத்தாசலத்தில் தக்கமுறையில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

-'ராஜூ'

---

ஒன்றாகும். ஓராண்டுக்குச் சுமார் ரூ.1.55 கோடிக்கு பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பனைத் தொழில் செய்து பதநீர் இறக்கும் தொழிலாளர்கள், விபத்துக்குள்ளாகி மரணமடைய நேர்ந்தால், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 உதவித் தொகை அவர்களுடைய குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது. பனைத் தொழிலின் முக்கியத்துவத்தை மனத்திற் கொண்டு இத்தொழிலை மேலும் வளர்ச்சி அடையச் செய்திட வேண்டி, பனைத் தொழிலுக்கு என ஒரு தனி வாரியம் ஏற்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவுசெய்து, 20.4.92-இல் தமிழகச் சட்டமன்றப் பேரவையிலும் இது அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பனைத் தொழிலுக்கென்று ஒரு தனி வாரியம் அமைத்திட, அரசு நிலையில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கதர்த் திட்டங்களின்கீழ் தயாரிக்கப்படும் பொருட்கள் தரம் வாய்ந்தவையாகவும், இயற்கையினால் ஆன பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதாலும், விலை மிகவும் நியாயமாக இருப்பதாலும், அவற்றைப் பொது மக்கள் அதிக அளவில் வாங்கிப் பயன்கொள்ள முடிகிறது. குறிப்பாக காதி கிராப்ட் தேன், கோபுரம் சலவைச் சோப்பு, டிடர்ஜெண்ட் சலவை சோப்பு, டிடர்ஜெண்ட் திரவ சோப்பு, வேம்பு நறுமணக் குளியல் சோப்பு, சந்தனக் குளியல் சோப்பு, கார்பாலிக் சோப்பு, புதிய இளஞ்சிவப்பு குளியல் சோப்பு, தரம்வாய்ந்த பலவண்ண வாழ்த்து அட்டைகள், ஆடவருக்கும், மகளிருக்கும் தேவையான காலணிகள், பள்ளிச் சிறுவர்களுக்கான காலணிகள், தோல் பொருட்கள், மட்பாண்டங்களிலான தரமான தண்ணீர்ப் பானைகள், தோட்டங்களுக்குத் தேவையான பூந்தொட்டிகள், ஊறுகாய் ஜாடிகள் மற்றும் ஏராளமான வீட்டுத் தேவைப் பொருட்கள் அனைத்தும் கதரங்காடியில் விற்பனை செய்யப்படுகின்றன.

'காதி கிராப்ட்' அங்காடிகளில் விற்பனை செய்யப்படும் தூய்மையான கதர்ப் பட்டுப் புடவைகள் இன்று மக்களிடம் மிகவும் பிரபலமடைந்துள்ளன. பட்டுப் புடவைகள் வாங்க வேண்டுமென்று நினைத்த மாத்திரத்தில், கதர் அங்காடி நினைவுக்கு வரும் வகையில் கதர்ப் பட்டுப் புடவைகள் மக்களிடம் புகழ்பெற்று விளங்குகின்றன.

கதர் கிராமத் தொழில் பொருட்களை ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களும், நகர மற்றும் மாநகரப் பகுதிகளில் வாழும் மக்களும் வாங்கி உபயோகித்தால், இத்தொழில்களில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான ஏழை மக்களின் வாழ்வு வளம்பெறும் என்பதில் ஐயமில்லை.

பட்டுக்கோட்டை
கல்யாணசுந்தரம்:

# பாடலும் படிப்பினையும்



'மக்கள் கவிஞர்' என்று மாநிலத்தவரெல்லாம் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்கள், பாமர மக்களை மட்டுமல்ல, படித்தவரையும்கூடத் தட்டி எழுப்பின.

அவரது பாடல்கள் என்றும் பதினாறாய், எல்லார்க்கும் தேனாறாய் விளங்கின!

எளிய சொற்கள், இதயத்திலே பதமாகப் பதியவைக்கும் கருத்துக்கள் அவரது எழுத்துக்களாகும்.

வெறும் வார்த்தை அலங்காரமாய் இல்லாமல், சமுதாய அலங்கோலத்தைச் சரியாகப் படம் பிடித்துக் காட்டுகின்ற படமாய் - பாடலாய் - பாடமாய் விளங்கின அவரது படைப்புகள்.

அவரது வாழ்க்கை வரலாற்றின் சில ஏடுகளைப் புரட்டுகிறோம்...

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 13.4.1930-இல் தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள சங்கன்படைத்தான் நாடு என்னும் ஊரில் பிறந்தார். பெற்றோர் திரு எஸ்.ஆர். அருணாசலம், திருமதி விசாலாட்சி.

விவசாயியான இவரது தந்தையார், பாடல் எழுதும் திறமையும் பெற்றிருந்தார். அதனால், கல்யாணசுந்தரத்திற்கு அந்த ஆர்வம் அப்போதே முகிழ்த்தது.

ஏழை எளியோரிடம் பழகிய கவிஞர், அவர்களின் வாழ்க்கைப் போராட்டங்களைக் கவிதையாக்கி, பலரிடம் படித்துக் காட்டியது மட்டுமல்ல, பாடியும் காட்டுவார்.

கவிதை பாடும் ஆற்றல் படிப்படியாய் வளர்ந்தது.

பாவேந்தர் பாரதிதாசனிடம் பாடங்கேட்டார். பாவேந்தரே வியக்கும் வண்ணம் பாடல்களை எழுதிப் பாராட்டுதல்கள் பெற்றார். கவிஞர் பாவேந்தரை மறக்கவில்லை. பாடல் எழுதும்போதும் கூட அவரை நினைவுகூர்ந்தார்.

''நல்ல குடும்பம் ஒரு
பல்கலைக் கழகம் என்று
தெள்ளு தமிழ்க் கவிஞன்
தெளிவுரை சொன்ன துண்டு''

என்று அவர் பாடியிருக்கிறார். பாவேந்தரின் தூண்டுதலால், கல்யாணசுந்தரத்தின் கவிதைத் திரி ஒழுங்காய் எரிந்தது. அதன் ஒளி எங்கும் பரவியது.

கவிஞர் பல நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதினார். அத்தோடு நடிக்கவும் செய்தார். 'ஜனசக்தி' இதழ், அவரது கவிதைகளை அவ்வப்போது வெளியிட்டு வந்தது. அவரது பாடல்கள் மக்களிடையே செல்வாக்கு பெற்றன. கருத்தாழமிக்க அந்தப் பாடல்களைக் கேட்டு மகிழாதாரே இல்லை எனலாம். பட்டி தொட்டிகளில், நாடு நகரங்களில் அவர் புகழ் பரவியது. அதன் விளைவு திரைப் படங்களில் வாய்ப்புகள் தேடி வந்தன. கவிஞர் எழுதிய முதல் படம் 'படித்த பெண்'. அதற்குப் பிறகு வெளிவந்த மாடர்ன் தியேட்டர்ஸின் 'பாசவலை' படம், ரசிகர்களின் பாசவலையில் கவிஞரைச் சிக்க வைத்தது எனலாம். அதன் பிறகு பல படங்களுக்கும் கவிஞர் பாடல்கள் எழுதினார். பாட்டும் கருத்தும் தேனில் ஊறிய பலாச்சுளையாக இனித்தது. அதன் இனிமையிலே மயங்கியவர் பலர்.

கவிஞரின் பாடல்கள், வெறும் இசைக்காக மட்டும் எழுதப்பட்டது அல்ல; மின்னல் கீற்றாய்த் தோன்றி மறைந்து விடுவதும் அல்ல. அது, கால காலத்துக்கும் நிற்கக்கூடிய கல்வெட்டாய், காலக்கண்ணாடியாய்த் திகழும் தெவிட்டாத தெள்ளமுது.

அக்டோபர்: 8 -
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
நினைவு நாள்:

அவரது பாடல்களிலே காதல், வீரம், சோகம், நகைச்சுவை, ஒருமைப்பாடு, சமூகச்சீர்திருத்தம் முதலான தன்மைகள் இழைந்தோடியதை நாம் பார்க்கலாம்.

அவரது பாடல்களிலே இலக்கியக் கருத்துக்கள் மட்டுமல்ல, மறைந்தும் மறையாமல் வாழுகின்ற மாக்கவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன், திருவள்ளுவர் போன்ற அறிஞர் பெருமக்களின் கருத்துக்கள் இடம் பெற்றன. அவற்றைப் பக்குவமாய்த் தம் பாடல்களிலே புகுத்திய பாங்கு மகிழ்தற்குரியது.

ஒரு கவிஞர் இன்னொரு கவிஞரைப் பாராட்டிப் பேசுவது என்பது அரிதாயிருக்கின்ற இச்சூழ்நிலையில், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் பாரதியைப் பற்றிக் கூறுகையில்,

பாரதிக்குநிகர் பாரதியே - மண்ணில்
யாரெதிர்த்தாலும் மக்கள்
சீருயர்த்தும் பணியில் (பாரதி)

என்று பாடியிருப்பது, அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில், கல்யாணசுந்தரம் அவர்களுக்குத் திருமணம் நடந்தது. துணைவியார் பெயர் திருமதி கௌரவம்மாள். 1959-இல் அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு குமரவேல் என்று பெயரிட்டு மகிழ்ந்தனர் பெற்றோர். ஆனால்... மழலைச் செல்வம் ஈன்ற அதே ஆண்டில் அதாவது 8.10.1959-இல், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் நம்மையெல்லாம் விட்டுப்பிரிந்தார்.


அவரது மறைவு குறித்து கவிஞர் கண்ணதாசன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

''நட்புக்கும் செம்மையான வாழ்க்கை நெறிக்கும், பண்புக்கும் சிறப்பானவர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். ஒவ்வொரு படத்திலும் அவரது பாடல்களைக் கேட்ட எனக்கு ஒரு கவிஞனை இழந்து விட்டோமே என்ற துக்கமே மேலிடுகிறது. என்னைக் காட்டிலும் உயர்ந்தவர் ஒருவருக்குச் செலுத்த வேண்டிய மரியாதையையும், அன்பையும் செலுத்துகிறேன்'' என்று புகழஞ்சலி செலுத்தினார்.

கல்யாணசுந்தரம் பாடல்களிலே கருத்து மழை மட்டும் பொழியவில்லை. படிப்போர், படிப்படியாய் உயர்வதற்கான படிப்பினையும் அதில் அடங்கி இருந்தது. அவரது பாடல்கள் சிந்தனையைத் தூண்டின; சமுதாய வளர்ச்சிக்குச் சரியான பாதையைக் காட்டின. அதுவே, அவர் உயர்வுக்கு வழி வகுத்தது - அவரை உன்னதக் கவிஞனாக உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.

'மனிதரை மனிதர்
சரிநிகர் சமமாய்
மதிப்பது நம் கடமை
வள்ளுவர் பெருமான்
சொல்லிய வழியில்
வாழ்வது அறிவுடைமை'

என்று கூறும் அவரது பாடலில், ஒருமைப்பாடு அரும்பி நிற்கின்றது. 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்ற



பாரதியின் முழக்கம் பாட்டில் இழையோடுகிறது

எல்லோரும் இந்நாட்டு மன்னரே - நாம்
எல்லோரும் இந்நாட்டு மன்னரே
நல்லாரும் பொல்லாரும்
நல்வழி செல்லாரும்
உள்ளாரும் காசுபணம்
இல்லாமல் இருந்தோரும்
(எல்லோரும்)

என்று எக்களிப்புடன் எழுதுகிறார் அவர்.

'எல்லோருக்கும் உலகம் ஒண்ணு
இருளும் ஒண்ணு ஒளியும் ஒண்ணு
இன்னும் சொன்னா நீயும் ஒண்ணு
நானும் ஒண்ணு தானே
யாரு மேலே கீறினாலும்
ரத்தம் ஒண்ணுதானே
ஆக மொத்தம் பிறந்ததெல்லாம்
பத்தாம் மாதம் தானே!

ஒருமைப்பாட்டை உணர்த்த இவ்வளவு எளிமையாக யாரும் பாடியிருக்க முடியாது.

படித்தால் மட்டும் போதுமா? அத்தோடு உழைப்பும் தேவை. இரண்டும் இணைந்தால் தான் உயர முடியும் என்பதை, எத்தனை அழகாக உணர்த்துகிறார் கவிஞர்!

'படிப்புத் தேவை - அதோடு
உழைப்பும் தேவை'

என்று இரண்டு தன்மைகளுக்கும் விளக்கம் தருகிறார் பாருங்கள் —

'உண்மை தெரியும்
உலகம் தெரியும்
படிப்பாலே - நம்
உடலும் வளரும்
தொழிலும் வளரும்
உழைப்பாலே!'

உழவர், நெசவாளர் முதலான ஏழை எளியோரிடம் பழகியவர் கவிஞர். நெசவாளர் கையினால் நேர்த்தியாய்

உருவாகும் கைத்தறியை அவர் பார்த்திருக்க வேண்டும். அதன் அழகில் அவர் மயங்கி இருக்க வேண்டும். இல்லையென்றால், இந்தச் சிங்காரப் பாட்டு பிறந் திருக்குமா?

'சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னிவரும்
சித்திரக் கைத்தறிச் சேலையடி - நம்ம
தென்னாட்டில் எந்நாளும் கொண்டாடும் வேலையடி'

கைத்தறிச் சேலையின் அழகை வார்த்தைகளால் நெய்த கவிஞர், 'கூட்டுறவு' என்றால் என்ன என்பதை நூலிழை போல பாடலிலே நுழைத்துக் காட்டிய அவரது நுண்மாண் நுழைபுலத்தைக் கண்டு வியக்கலாம்.

'ஒற்றுமையோடு அத்தனை நாளும்
ஒழுங்கா வந்தா வளரும் - இதில்
ஒரு நூலறுந்தால் குளறும் - இதை
ஒட்டும் ஏழை கூட்டுறவாலே
உலகில் தொழில் வளம் உயரும் - இந்த
உலகில் தொழில் வளம் உயரும்!

என்று 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதைச் சொல்லாமல் சொல்கிறார்.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள். கவலை உனக்கில்லை ஒத்துக் கொள்' என்றார் நாமக்கல் கவிஞர். எந்தத் தொழில் செய்தாலும், அப்படிச் செய்கின்ற தொழில்தான் தெய்வமாகும் என்பதைத் தெளிவு படுத்துகிறார் கவிஞர்.

'செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி - கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி'

ஒவ்வொரு வரியும் வைர வரிகளே அன்றோ?

சமுதாயத்திலே வளர்ந்துவரும் சீர்கேடுகளில் ஒன்று தான், மூட நம்பிக்கை. இந்த நம்பிக்கையினால் நாசமாகும் குடும்பங்கள் பலப்பல. அதைக் கண்ணுற்ற கவிஞர், அதைக் களைய எண்ணினார். மூடநம்பிக்கை எனும் இந்த முடைநாற்றத்தைப் போக்க, யாரிடம் சொன்னால் அது நடக்கும் என்பதை அவர் உணர்ந் திருக்க வேண்டும். உடனே அவருக்குப் பளிச்செனத் தெரிந்தது நாளையத் தலைமுறைகளான இன்றைய குழந்தைகளே. ஆம். அந்தக் குழந்தைகளைப் பார்த்து அறிவுரை கூறுகிறார், கவிஞர். அறிவுரைகளாக மலரும் அந்தப் புகழ் பெற்ற பாடல்தான் -

'சின்னப் பயலே சின்னப் பயலே
சேதி கேளடா!'

என்பது.

வளர்ச்சி என்பது வெறும் உயரத்தை மட்டும் கணக் கிடுவது அல்ல. அது, அறிவைப் பொறுத்தே அமைகிறது என்பதை ஆணித்தரமாகக் கூறுகிறார் கவிஞர்.

'ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
அதுதாண்டா வளர்ச்சி'

என்று கூறிவிட்டு, வள்ளுவர் கூறும் 'சான்றோன் எனக் கேட்ட தாய்' என்னும் குறளை நினைவுறுத்தும் வகையில் இந்தப் பாட்டின் அடுத்த அடியாக,

ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே - நீ
தரும் மகிழ்ச்சி'

என்கிறார். இதைப் படிக்கும்போது நமக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது!

இந்தப் பாடலிலே தன்மான உணர்ச்சியைக் கோடிட்டுக் காட்டும் கவிஞர், மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்கிற தத்துவத்தைப் போதிக்கிறார்.

'மனிதனாக வாழ்ந்திட வேணும்
மனதில் வையடா - தம்பி
மனதில் வையடா
வளர்ந்து வரும் உலகத்துக்கே - நீ
வலது கையடா - நீ
வலது கையடா!

என்று குழந்தை இலக்கியமே படைக்கிறார் கவிஞர்.

'அச்சம் தவிர்' என்னும் பாரதியின் வாக்கிற்கிணங்க சிறுவயதிலேயே பயத்தைப் போக்கி, பகுத்தறிவைப் புகட்ட வேண்டும். பேய், பிசாசு, என்பதெல்லாம் மூடநம்பிக்கைகள் என்று குழந்தைகளுக்கு உணர்த்த வேண்டும். எப்படி?

'வேப்பமர உச்சியில் நின்னு
பேயொன்னு ஆடுதுன்னு
விளையாடப் போகும்போது
சொல்லி வைப்பாங்க - உன்
வீரத்தைக் கொழுந்திலேயே
கிள்ளி வைப்பாங்க.

வேலையற்ற வீணர்களின்
மூளையற்ற வார்த்தைகளை
வேடிக்கையாகக் கூட
நம்பி விடாதே - நீ
வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து
வெம்பி விடாதே - நீ
வெம்பி விடாதே!''

★ நான் என்கிற அகந்தையை ஒழிப்பது; மிகமிகப் பணிவோடு நடந்து கொள்வது, அதிகமான பொறுமை காட்டுவது, தெளிவான நம்பிக்கையோடிருப்பது-இந்தக் குணங்களெல்லாம் உடையதுதான் சத்தியாக்கிரகமாகும்.

★ தூய்மையான வழிகளின் மூலம் பெற்ற அதே சுதந்திரத்தை, அதே தூய்மையான, நேர்மையான வழி களின் மூலம் காப்பாற்றி வர வேண்டும்.

★ நம் தவறுகளுக்காக நாம் வருந்து வதற்கும், இன்றைய நிலையைவிட மேலான, பரிசுத்தமான நிலையை அடைய விரும்புவதற்கும் சின்னமாக விளங்குகிறது பிரார்த்தனை.





ஏக்கம், ஏமாற்றம், அதைரியம், அச்சம், கர்வம், கோபம் எதுவுமே மாணவர்கள் அகராதி யில் இருக்கக் கூடாது.

மன அமைதி பிரார்த்தனையினாலேயே உண்டாகும். அமைதி ஒன்றின் மூலமே ஒருவன் பிறருக்கு உதவ முடியும்.

- அண்ணல் காந்தியடிகள்

என்று இப்படி இலைமறைகாயாகக் கருத்துக்களைப் புகுத்தும் திறன் கவிஞருக்குக் கைவந்த கலை.

'மனிதனாக வாழ வேண்டும்' என்று கூறிய கவிஞர், அப்படி மனிதனாக வாழ விழிப்புணர்வு தேவை என் கிறார். தூங்கி, தம் உயர்வைத் தாமே கெடுத்துக் கொள்ளாமல், எதையும் தாங்கி இதயத்தைப் பதப் படுத்திட - பலப்படுத்திக் கொள்ள வேண்டும். கவிஞர் கூறுகிறார்.

'தூங்காதே தம்பி
தூங்காதே - நீயும்
சோம்பேறி என்ற பெயர்
வாங்காதே!

என்று அப்படித் தூங்குவதால், என்னென்ன விளைவுகள் எல்லாம் வரும் என்பதைப் பட்டியல் போட்டுக் காட்டுகின்றார் கவிஞர்.

நல்ல பொழுதையெல்லாம்
தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன்
தானுங் கெட்டார் - சிலர்
அல்லும் பகலும்
தெருக்கல்லா யிருந்து விட்டு
அதிர்ஷ்ட மில்லையென்று
அலட்டிக் கொண்டார்

என்று கூறி, அழுத்தந் திருத்தமாக,

'விழித்துக் கொண்டோரெல்லாம்
பிழைத்துக் கொண்டார் - உன்போல்
குறட்டை விட்டோரெல்லாம்
கோட்டை விட்டார்.

என்கிறார்.

திருட்டுக்குக் காரணம், வறுமை என்பார்கள். ஆனால், திறமை இருக்கும்போது, ஏன் திருட வேண்டும்? என்று கேட்கிறார் கவிஞர்.

திருடாதே! பாப்பா திருடாதே!
வறுமை நிலைக்குப் பயந்து விடாதே!
திறமை இருக்கு மறந்து விடாதே!

என்று சின்னஞ்சிறு மனத்தில் சிந்தனைச் சுடரை ஏற்றுகிறார்.

கற்க வேண்டிய நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்றபிறகு, அதற்கு ஏற்றவாறு நெறியில் நிற்க வேண்டும் என்பது திருக்குறள். அந்தக் கருத்தை வலியுறுத்தும் வண்ணம்,

ஏட்டில் படித்ததோடு
இருந்து விடாதே - நீ
ஏன் படித்தோம் என்பதையும்
மறந்து விடாதே!

என்று கூறி, ''மூத்தோர் சொல் வார்த்தைகளை மீறக்கூடாது'' என்றும் அறிவுறுத்துகிறார். 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்று சொன்னதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

கேள்வி - பதில் வடிவிலே ஒரு பாட்டு,

உலகில் சிறந்தது என்ன?
அன்பு உள்ளவன் செய்திடும் தானம்.
அந்தத் தானத்தில் சிறந்தது என்ன?
நல்ல தன்மை வளர்க்கும் நிதானம்.
அதிலும் சிறந்தது என்ன?
பல அகிம்சா மூர்த்திகள்
ஆராய்ந்து சொன்ன உலக சமாதானம்!

என்று முத்தாய்ப்பு வைத்ததுபோல முடிக்கிறார். இங்கே அண்ணல் காந்தியடிகளை நினைவுபடுத்துகிறார் கவிஞர்.

ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து பாடுவது போல ஒரு பாட்டு. ஆசிரியர் கூறுகிறார் -

அன்புக்கு வணங்கு
அறிந்த்பின் இணங்கு
பண்புடன் விளங்கு
பசித்தவர்க் கிரங்கு

பிறகு ஒரு பெண் குழந்தை கூறுகிறது -

நேர்மையைக் காட்டு
பொன் மொழி கேட்டு
பொய்மையை மாற்று
பொறுப்புகள் ஏற்று
பொதுப் பணியாற்று

என்று, பிறகு முடிவாக, ஆசிரியர் கூறுகிறார் -

திருக்குறள் நூலை
சிறந்த முப்பாலை
கருத்துடன் காலை
படிப்பது வேலை

என்று. இப்படி ஒவ்வொரு பாடலையும் மேற்கோள் காட்டிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

காலத்தால் அழிக்க முடியாத கருத்துக் கருவூலங்களை வழங்கிச் சென்ற கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள், காலத்தால் அழிக்க முடியாத அவரது படைப்பு களைப் போலவே, இன்றும் பெயரும் புகழுடன் நின்று நிலவுகிறார் நம் நெஞ்சிலே!

பி.வி. கிரி



# சிதம்பரத்தில் சிறந்து வரும்

# நாட்டியாஞ்சலி

**சி**தம்பரத்திற்குச் சோழராட்சிக் கால வரலாற்று முக்கியத்துவம் நிறைய உண்டு.

ஆதித்த சோழன் தில்லைச் சிற்றம்பல முகப்பில் பொன் வேய்ந்தான்; அவன்மகன் பராந்தகச் சோழன் தில்லையம்பலத்திற்குப் பொன் வேய்ந்தான்; இவனே அங்குள்ள வீரநாராயணன் ஏரியை வெட்டிய பெருமையும் பெற்றான்.

கண்டராதித்த சோழனால், தென்னார்க்காடு மாவட்டத்திலே சமணப் பள்ளியொன்று கட்டப்பட்டது.

அவனுடைய தம்பி அரிஞ்சய சோழன், சில காலமே அரசாண்டான்; பின்னர் ஆற்றூரில் இறந்து போனான்; இதனாலேயே 'ஆற்றூர்த் துஞ்சின தேவர்' எனப் பெயர் பெற்றான்.

வடக்கே கங்கை வரை சென்று வென்றவனும், இலங்கை முழுவதையும் தம் ஆட்சிக்கு உட்படுத்தியவனும், பிற்காலச் சோழர்களில், குறிப்படத்தக்கவனும் ஆன இராசேந்திர சோழன் தம் நாட்டைச் சுற்றிப் பார்க்க வந்தபோது தொண்டை மண்டலத்திலுள்ள பிரம்மதேசத்தில்தான் இறந்தான் என்றும் - அவன் மனைவி வீரமாதேவி இங்கேதான் உடன்கட்டை ஏறினாள் என்றும் வரலாற்றறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் குறிப்பிட்டு உள்ளார்.


வீரராசேந்திர சோழன், தில்லைச் சிற்றம்பலத்தானின், மணிமுடியை அணிசெய்யும் 'திரைலோக்கியசாரம்' என்ற விலைமதிப்பற்ற மாணிக்க மணியொன்றை வழங்கினான்.

விக்ரம சோழனும், இரண்டாம் குலோத்துங்கனும் தில்லையம்பலத்திற்குப் பல திருப்பணிகள் செய்திருக்கிறார்கள்.

600 ஆண்டுக்காலம் கழித்து ஆட்சிக்கு வந்த பிற்கால சோழப் பேரரசு - விஜயாலய சோழன் முதல் அதிராசேந்திர சோழன் வரை பெரும் புகழ் கொண்டிருந்தது.

தில்லையம்பதியைப் பொறுத்த வரை - பாண்டியராட்சியும் சில காலம் இப்பகுதியிலேயே இருந்ததுண்டு.

இவை தென்னார்க்காடு மாவட்டத்தில் முடியாட்சிக் கால முக்கியச் செய்தியாகும்; வள்ளலார் மாவட்



டம் என்றும், இராமசாமி படையாட்சியர் மாவட்டம் என்றும் அப்பகுதி குறிப்பிடப்படும் இந்நாளிலும் அங்கே எண்ணியெண்ணி மகிழத்தக்க நிகழ்ச்சிகள் பல நடந்த வண்ணம் இருக்கின்றன.

அவைகளிலே - முக்கியமாகத் தில்லையம்பதியிலே ஆண்டுதோறும் நடத்தப்படும் 'நாட்டியாஞ்சலி' நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இசை, நடனம் போன்ற கலைமலி விழாக்கள் பல நடந்தன. சோழராட்சிக் காலத்தே. அந்தப் பாரம்பரியப் பெருமையை நினைவூட்டுவதாக இயங்கி வருவதே 'நாட்டியாஞ்சலி' என்ற அற்புத அமைப்பு.

*1981*-ஆம் ஆண்டில், மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் முன்னின்று ஆர்வத்தோடு துவக்கிய அமைப்பு இது. இவ்வமைப்பின் மூலம், ஆண்டுதோறும் சிதம்பரம் தில்லையம்பலத்திலே நாட்டிய விழா நடத்தப்படுகிறது.

பெரும்பாலும் மாசி மாதத்தில் - அதாவது பிப்ரவரி அல்லது மார்ச்சு மாதத்தில், இவ்விழா ஒருவார காலம் அல்லது ஐந்து நாட்கள் தொடர்ந்து நடத்தப்படுகிறது. பெரும்பாலும் சிவராத்திரியில் இந்நிகழ்ச்சி தொடங்கும். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலே இருந்தும் நடனக் கலைவல்ல நங்கையர் பலர் இங்கே வந்து இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பிப்பார்கள்.



ஏறத்தாழ முப்பது நாற்பது நடனக்குழுவைச் சேர்ந்த நூற்றுக்கு மேலானோர் கலந்து கொள்ளும் இந்த நாட்டியாஞ்சலி விழா விடிய விடிய நடைபெறும்; ஐந்தாறு குழுவினர் மாறி மாறி ஆடி மகிழ்விப்பர்; ஐயாயிரத்திற்கும் மேலானோர் இதனைக் கண்டானந்திப்பார்கள். நடன மணிகளைப் போலவே பார்வையாளர்களும் வெளியூரிலிருந்தெல்லாம் வந்து கூடுவர்.

ஆடல் கலைக்கழகு தேடப் பிறந்த அவர்கள் - ஒவ்வொரு நாளும் பரதநாட்டியம் மட்டுமல்ல; ஒடிசி, குச்சுபுடி, மயூர்பஞ்ச், மோகினி ஆட்டம், யக்சகானம் கதகளி ஆகிய நடனங்களும் ஆடித் தத்தம் திறமையை வெளிப்படுத்துவது வாடிக்கையாக இருக்கும்.

இத்தனைக்கும் அவர்களுக்கு எந்த விதமான அன்பளிப்பும் தரப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது; போக்குவரத்து, உணவு தங்குமிடம், ஒலி-ஒளி அமைப்பு ஆகியவற்றை மட்டுமே 'நாட்டியாஞ்சலி' அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஏற்பாடு செய்து தருகிறார்கள்.

இதற்காகும் செலவை மத்திய அரசும் மாநில அரசுமே ஏற்கின்றன. இது தவிர, தனியார் நிறுவனங்களும் நிதியுதவி செய்வதுண்டு. இந்த ஒரு வார நடன நிகழ்ச்சிக்கு, ஏறத்தாழ இரண்டு இலட்சம் ரூபாய் வரை செலவாகுமாம்.

கூத்தபிரான் உள்ள திருக்கோயில், இந்தியாவிலேயே இது ஒன்றுதான். இதனாலேயே நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி ஆண்டுதோறும் இக்கோயில் வளாகத்தில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்பவர்களின் தகுதி - அவர்களுடைய குரு யார்? எத்தனை நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறார்? அரங்கேற்றம் ஆனவரா? *18* வயதைக் கடந்தவரா? - என்றெல்லாம் கவனித்தே நிர்ணயிக்கப்படுகிறது.



நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியைக் கண்டானந்திக்க இந்துக்கள் மட்டுமல்ல; கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் கூட ஆர்வத்தோடு வந்து கூடுவார்கள்.

இந்நிகழ்ச்சி நடைபெறும் காலங்களில், வருவோர்க்கு உதவச் சுற்றுலாத்துறை மூலம் ஒரு தனி அலுவலகப் பிரிவும் சிதம்பரம் கோயிலுக்குள் செயல்படும். இது மட்டுமல்ல; கோயிலில் உள்ள ஆயிரங்கால் மண்டபத்தில், நாட்டியாஞ்சலி துவங்கும் நாளன்று காலையில் கருத்தரங்கம் ஒன்றும் நடத்தப்படும்.

திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., டாக்டர் கால வாத்சாயனா, திரு எம்.ஏ.எம். இராமசாமி, திரு என்.மகாலிங்கம், திரு டி.டி.வாசு, திரு எம்.ஏ. சிதம்பரம், திரு ஏ.சி. முத்தையா, திரு எம்.வி. சுப்பையா ஆகியோர் - நாட்டியாஞ்சலி அமைப்பின் புகழ் காக்கும் புரவலர்களாக உள்ளனர்.

டாக்டர் இரா. நாகசாமி, திரு ஏ. சம்பந்தம் ஆகியோர் நாட்டியாஞ்சலி சிறப்புறச் செயல்படச் செய்திடும் செயலாளர்களாக இருக்கிறார்கள்.

— பி.எல். இராசேந்திரன்

# நெல்லை மாவட்டத்தில் பால்வளம்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கம் 30.8.1982 அன்று பதிவு செய்யப்பட்டு, 1.1.1983 முதல் செயல்பட்டு வருகின்றது. இதற்கு முன்பு மாநிலப் பால்வளத் துறையின்கீழும் (1.7.74 வரை) அதன்பின் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் கீழும் (1.2.81 முடிய) இயங்கி வந்தது.

இதன் ஆளுகைக்கு உட்பட்ட திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களின் மொத்த பரப்பளவு 11,433 ச.கி.மீ. இது தமிழகத்தின் மொத்த பரப்பளவில் 8.8 சதவிகிதம் ஆகும்.

1982-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கென்படி இம் மாவட்டத்தில் உள்ள கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை 7.16 இலட்சமாகும். இதில் கறவை மாடுகள் 2.71 இலட்சமாகும். எருமை மாடு நாளொன்றுக்கு 1.56 லிட்டர் பாலும் பசு மாடு 2.24 லிட்டர் பாலும் தருகிறது.

திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கத்தில் 436 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களின் பங்குத் தொகை ரூ.6,16,500 அரசின் பங்குத் தொகை ரூ.1,14,50,000 ஆகும். ஆக மொத்த முதலீடு ரூ.1,20,66,500 ஆகும். இச்சங்கம் 16 தாலுக்காக்களுக்குப் பயனளிக்கிறது. இந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் நாளொன்றுக்கு 87,249 லிட்டர் பால் உற்பத்தி செய்கின்றது. 60,756 லிட்டர் பாலைக் கொள்முதல் செய்கிறது.

திருநெல்வேலி பால் பண்ணையில் நாளொன்றுக்கு 18,522 லிட்டரும் சங்கரன்கோவில் நிறுவனத்தில் 24,640 லிட்டர் பாலும், வள்ளியூரில் 11,952 லிட்டர் பாலும், கோவில்பட்டியில் 3,011 லிட்டர் பாலும், சாத்தான் குளத்தில் 2,651 லிட்டர் பாலும் சேகரிக்கப்படுகிறது. 256 சங்கங்களைச் சேர்ந்த கறவை மாடுகளின் ஆரோக்கியம் பேணப்படுகிறது. இதில் 220 தேர்ச்சி பெற்ற பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். 52 ஏக்கர் நிலப் பரப்பில் மாட்டுத் தீவனம் வளர்க்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு 100 டன் மாட்டுதீவனம் பால் உற்பத்தியாளர்களுக்கு விற்கப்படுகிறது. இம்மாவட்டங்களில் 9 பால் விநியோக வழித்தடங்கள் மூலம் நாளொன்றுக்கு 39,000 லிட்டர் பதப்படுத்தப் பால் பாக்கெட்டுகளில் நிரப்பப்பட்டு விற்கப்படுகிறது.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு அரசு ஆகிய வற்றின் உதவியுடன் ஒருங்கிணைந்த பால்வளத் திட்டம் 1987 முதல் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:

1. 184 புதிய பால் உற்பத்தியாளர் சங்கங்களை ஒரு நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வருதல்- பால் கொள்முதலில் 651 சங்கங்களை ஈடுபடுத்துதல்.

2. 80, 900 விவசாயிகளை கூட்டுறவின் கீழ்கொண்டு வருதல்- 1,05,000 கறவை மாடுகளைப் பேணிக்காத்தல்.

3. பால் கொள்முதலை நாளொன்றுக்கு 73,600 லிட்டராக உயர்த்துதல்.

4. பால் விற்பனையை நாளொன்றுக்கு 60,000 லிட்டராக உயர்த்துதல்.

5. கால்நடை ஆரோக்கியம் செயறிகைக் கருத்தரித்தல் ஆகிய திட்டத்தின் கீழ் 520 சங்கங்களைக் கொண்டு வருதல்.

## திராட்சைக்கு கிராக்கி

பழச்சாறுக்கும், பழரசத்திற்கும் மூலம் திராட்சை. உலகில் உற்பத்தியாகும் 5.9 மில்லியன் டன் திராட்சை இந்தியாவில் 0.4 மில்லியன் டன் திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது. இத்தாலி, சிலி, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் பெருமளவில் திராட்சையை உற்பத்தி செய்கின்றன.

இந்தியாவில் மகாராஷ்டிரா '38.9%', கர்நாடகா '31.02%', ஆந்திரப்பிரதேசம் '10.08%', தமிழ்நாடு '8.09%', பஞ்சாப் '5.7%' ஆகிய மாநிலங்களில் திராட்சை உற்பத்தியாகிறது. 1,450 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள 14 இலட்சம் மெட்ரிக் டன் திராட்சை உலக வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படுகிறது.

ஐரோப்பாவும், வட அமெரிக்காவும் திராட்சையை அதிகம் இறக்குமதி செய்கின்றன. சிலி அதிக அளவில் திராட்சையை ஏற்றுமதி செய்கிறது. மாம்பழத்திற்கு அடுத்தபடியாக திராட்சைதான் அதிக அளவில் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.704.34 இலட்சங்களாகும். சங்கரன்கோவிலில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பாலையும், கோவில்பட்டியில் 10,000 லிட்டர் பாலையும் குளிர்ப்படுத்தும் நிலையம் கட்டப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கான சுகாதார நிலையம் திருநெல்வேலியிலும் கோவில் பட்டியிலும், வள்ளியூரிலும் கிளை நிலையங்களும் அமைக்கப்பட்டன. கால்நடை தீவனக் கிடங்குகள் வள்ளியூரிலும், கோவில் பட்டியிலும் கட்டப்பட்டன.

செயற்கைக் கருத்தரிப்புப் பணியில் 220 கிராமப்புற பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதற்காக 277 குளிர்ப்பதனப் பெட்டிகள் வாங்கப்பட்டுள்ளன.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவும் வகையில் பரிசோதனைச் சாதனங்கள், இரசாயனம், புத்தகங்கள், படிவங்கள், முதலுதவிப் பெட்டிகள் முதலியன வழங்கப்படுகின்றன. செயற்கைக் கருத்தரிப்புக் கணக்கு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஆனந்த் மற்றும் இதர பெரிய பால் பண்ணைகளுக்கு விவசாயிகளை அழைத்துச் செல்லும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் தலா ரூ.270 இலட்சம் செலவில் மைக்ரோ பால் பண்ணைத் திட்டம் விரைவில் அமலபடுத்தப்படவுள்ளது.

ரூ.3 கோடி செலவில் நாளொன்றுக்கு 10 மெட்ரிக் டன் கால்நடை தீவன தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

ரூ.5.77 கோடி செலவில் ஒரு ஒருங்கிணைந்த பால்வளத் திட்டம் சிதம்பரனார் மாவட்டத்தில் அமைக்கத் திட்டம் அரசின் பரிசீலனை யில் உள்ளது.

இத்தகைய பல்வேறு திட்டங்களினால் திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் வெண்மைப் புரட்சி புதிய உத்வேகத்துடன் நடைபெற்றுக் கொண்டிருப்பது, அனைவரது வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளது.



## அண்ணல் காந்தியடிகளுக்கு வழிகாட்டிய பாடல்!

அண்ணல் காந்தியடிகளுக்குப் பிடித்தமான பாடல் ஒன்று உண்டு. அது என்ன?

'சத்தியசோதனை'யில், அதை அவரே கூறுகிறார்.

''ஒன்று மாத்திரம் என்னுள் வேரூன்றியது: 'ஒழுக்கமே எல்லாவற்றிற்கும் அடிப்படை; சத்தியமே ஒழுக்கமெல்லாவற்றின் சாரமும்' என்று நான் கொண்ட உறுதியே அது. சத்தியம் என் ஒரே இலட்சிமாயிற்று. ஒவ்வொரு நாளும் அதன் மகிமை வளரலாயிற்று. அதற்கு நான் கொண்ட பொருளும் விரிவாகிக் கொண்டே வந்தது.

''அதேபோல நன்னெறியைப் போதிக்கும் ஒரு குஜராத்திப் பாடலும் என் அறிவையும் உள்ளத்தையும் கொள்ளை கொண்டது. 'தீமை செய்தோருக்கும் நன்மையே செய்' என்ற அப்பாடலின் போதனை, என் வாழ்க்கையில் வழிகாட்டும் தருமமாயிற்று. அதில் எனக்கு அதிகப் பிரேமை உண்டாக்கி விட்டதால், அதை மேற்கோளாகக் கொண்டு பற்பல சோதனைகளையும் செய்யத் தொடங்கினேன். மிக அற்புதமானவை என நான் எண்ணும் அப் பாடலின் வரிகள் இவை:

'உண்ணும் நீர் தந்த ஒருவனுக்குக் கைம்மாறாய்
விண்ணமுதைப்போல் அன்னம் விரும்பிப்
படைத்திடுவாய்.
அன்போடு கும்பிட்டால் அடிபணிந்து நீதொழுவாய்.
உயிர்காத்தோன் துன்பத்தை உயிர்கொடுத்து நீ
துடைப்பாய்.
செயலாலும் சொல்லாலும் சிந்தையினாலும்
பெரியோர்
சின்னஞ்சிறு உதவி செய்தவர்க்கு எந்நாளும்
ஒன்றுக்குப் பத்தாய் உவந்துசெய்வர் பேருதவி,
வையத்தார் எல்லோரும் ஒன்றெனவே
மாண்புடையோர்
ஐயப்பா டின்றி அறிந்திருக்கும் காரணத்தால்
இன்னாசெய்தாரை ஒறுக்க, அவர் நாண
நன்னயம் செய்து விடுவர் இந்நானிலத்தே!'

# மன நலம்

**மனநல மருத்துவர்**
**டாக்டர் எஸ். மாத்ருபூதம்**
**அவர்களின் பதில்கள்**

**வி. ராமையன்**
**முத்துப்பேட்டை**

★ IMP 002, CPZ 001, MVZ 010 மன நோய்க்குரிய இம்மாத்திரைகள் பல ஆண்டுகள் தொடர்ந்து சாப்பிடுவதால், கண், இதயம், விரைவில் பாதிப்பு அடையுமா? தயவு செய்து பதில் அளிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

சில மன நோய்களுக்குத் தொடர்ந்து பல ஆண்டுகள் மருந்து சாப்பிட வேண்டி வரும். ஆனால், சிலருக்கு மாத்திரைகளால் சில பக்க விளைவுகள் (Side effects) ஏற்படுகின்றன. ஆனால், இம்மருந்து தெளிவான பார்வையில், சில பாதிப்பை ஏற்படுத்தலாம். சில சமயம் 'ECG'-இல் மாறுதல் ஏற்படலாம். ஏதேனும் கண், இருதய சம்பந்தமான (பார்வை மங்குதல், இதயவலி) ஏற்பட்டால் மருத்துவரை அணுகவும். அவர் மருந்தைக் குறைத்தோ நிறுத்தியோ, மாற்றியோ உதவுவார். இம்மருந்துகளின் இவ்விளைவுகள், மருந்தைக் குறைத்தால், தேவைப்பட்டால் நிறுத்தினால் சரியாகிவிடும்.

**எஸ். செல்லதுரை**
**சிதம்பரம் மாவட்டம்**

**★ என் குடும்பத்தில் எனது அக்கா கல்யாணம் செய்வதற்குப் பணம் இல்லாமல் எனக்குச் சோர்வு ஏற்பட்டுவிட்டது. நான் என் அக்காவை நினைத்து எப்போதும் அதே நினைப்புகளில் இருக்கிறேன். நீங்கள் உங்களால் முடிந்தவரை இதிலிருந்து மீள உதவி செய்யுங்கள்.**

தீராத பிரச்சினையால் அல்லது இவரால் தீர்க்க முடியாத பிரச்சினையால் இவருக்கு மனச்சோர்வு ஏற்பட்டிருக்கிறது. இவர் தன்னம்பிக்கையோடு செயல்பட்டால், வேலை கிடைக்கும். பண வசதி வரும், அக்காவின் திருமணமும் நடைபெறும்; சோர்வும் நீங்கும்.

**க. பெரியசாமி**
**வெங்கமேடு**

**★ எனக்குக் கற்பனை அதிகம் வருகிறது.**



**இதற்கும் மனநலத்திற்கும் சம்பந்தம் உண்டா டாக்டர்?**

கற்பனை வளமானதானால், ஆக்கபூர்வமாக அமையும். ஆனால் நல்ல கற்பனையைச் செய லாக்க முயற்சி, உழைப்பு தேவை. தன்னம்பிக்கை யும் கொண்டு செயல்பட வேண்டும். அதைவிடுத்து, கற்பனை - பகல் கனவாக மாறினாலோ அல்லது ஆதாரமற்ற தவறான நம்பிக்கைக்கு வழிகோலினாலோ மட்டுமே மன நோய்க்கு வித்தாக அமையும். உலகில் தலைசிறந்த விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள் மற்றும் பலர் தெளிந்த சிந்தனையோடு, கற்பனை வளம் பெருகி நிறைய சாதித்த வரலாறும் உண்டு.

**எஸ்.எஸ். வாசன்**
**தென்னலப்பாக்கம்**

**★ பிரிவின் பாசத்தால் அந்தச் சம்பவத்தை நினைக்கும் போதும், தனிமையில் இருக்கும் போதும் தானாகவே அழுகை வருகிறது. இதனால் எனக்கு மனநலம் பாதிக்கப்படுமா? என்று பயப்படுகிறேன். வேலை செய்வதிலும் இதனால் சோம்பல் தனமாகிறது. இனி நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?**

"நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா?", "உறவு என்றொரு சொல்லிருந் தால், பிரிவு என்றொரு பொருளிருக்கும்' என்பதற்கேற்ப, நடந்ததைக் கனவாக மறந்து, நடப்பவை நல்லவையாக இருக்கும் என்று நம்பிக் கையோடு செயல்படுங்கள். கடந்தகாலப் பிரிவை நினைத்து வாடுவதால், அது பிரச்சினைக்குத் தீர் வாகாது என்பதால், நிகழ்கால யதார்த்தத்திற்கு வாருங்கள். சோம்பல் முறியும், உள்ளம் மகிழும், "Past is gone... Don'tt worry about it; Future is yet to come..Don't bother about it. But, Present' is right before you... Make constructive use of it and progress in life". உள்ளத்திலே உரமும், உண்மை யிலே திறமும் கொண்டு வெற்றிப்பாதையில் செல்லுங்கள்.

**எம். முருகேசன்**
**கள்ளிச்செட்டிப்பட்டி**

**★ எனது தம்பிக்கு 25 வயதாகிறது. அவனுக்கு 10 ஆண்டுகளாக மனநலம் சரியில்லாமல், தலையில் மூளைக்கோளாறு இருக்கிறது என டாக்டர்கள் சொன்னார்கள், மாத்திரையும் சாப்பிடுகிறான். அம்மாவாசை நாட்களில் மட்டும் அவனைக் கட்டுப்படுத்த முடியாதபடி இருக் கிறான். மற்ற நாட்களில் நன்றாகப் பேசுகிறான். வெளியே சென்றால் சுடுகாட்டிற்குச் செல்கிறான். அங்கேயே தூங்கியும் விடுகிறான். இது எதனால்?**

**★ மனநலம் பெற ஏதாவது உடற்பயிற்சி உண்டா?**

**★ பொறாமை, கோபம் அடிக்கடி ஏற்படுகிறது எப்படிக் கட்டுப்படுத்துவது?**

**★ பைத்தியம் எப்படிப் பிடிக்கிறது? செய் வினையா? மூளையின் கோளாறிலா?**

**★ பெண்களின் மனநிலை இருபக்கக் கொள்ளி யாக இருப்பது ஏன்? பிறந்த வீட்டுக்கும், புகுந்த வீட்டுக்கும் ஒருசில பெண்கள், கஷ்டத்தையும் கொடுக்கிறார்கள். - நல்லதையும் செய்கிறார்கள். இவர்களை ஒருமுகப்படுத்த மனநலத்தால் முடியுமா?**

இது ஒரு மூளை பாதிப்பால் ஏற்பட்ட அல்லது தானாகவே வரும் மனச் சிதைவு நோயாக இருக்கலாம். மனநல மருத்துவர் பரிட்சைக்குப் பின்னரே தெளிவான பதில் கிடைக்கும்.

நல்ல உடல் நலம் - நல்ல மனநலத்திற்கு உறுதுணையாகும்.

தேவைக்குமேல் கோபம், பொறாமையும் ஒரு மன நோயே! தியானம் சில மருந்துகள் (மனதைச் சமன்படுத்துவன) இதற்கு உதவும். அருகில் உள்ள மனநல மருத்துவரைக் கலந்து ஆலோசிக்கவும்.

பைத்தியம் என்று சொல்லாதீர்கள். மனச் சிதைவு நோய், உணர்ச்சி சார்ந்த மனநோய் - மூளையில் ஏற்படும் இரசாயனக் கோளாறினால், வம்சாவழியாக ஏற்படக்கூடிய நோய்களே.

பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் சில சமயம் இருதலைக்கொள்ளி எறும்பு போல் தவிப்ப துண்டு. அதேபோல் ஆண்களாலும் கஷ்ட நஷ்டமுண்டு. இது ஒரு மனநோய் அல்ல.

**இன்னும் வரும்...**

## புகையே பகை!

**★ புகை உயிருக்கு பகை. புகை பிடிப்பவர்கள் விடும் புகையைச் சுவாசிப்பவர்களும் இதனால் பாதிக்கப் படுகிறார்கள்.**

**★ உலகில் ஆண்டுதோறும் 30 இலட்சம் பேர் புகையிலை சார்ந்த நோயினால் மரணமடைகின்றனர்.**

**★ உலக மக்கள் தொகையில் 50 கோடி பேர் புகையிலையால் இறப்பார்கள் என்று கருதப்படுகிறது.**

**★ இந்தியாவில் 15 வயதிற்கு மேல் சுமார் 14.2 கோடி ஆண்களும், 7.2 கோடி பெண்களும் புகையிலைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ளனர்.**

**★ 1991-இல் புகையிலைப் பழக்கத்தினால் நம் நாட்டில் சுமார் எட்டு இலட்சம் பேர் இறந்தனர். தினசரி 2,200 பேர் இறந்து விடுகின்றனர்.**

**★ 1990-இல் 2.1 இலட்சம் பேர் புகையிலைப்பழக்கம் காரணமாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டனர்.**

**★ இதய நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் 57 இலட்சம் பேரில் 26 இலட்சம் பேருக்கு, புகையிலையினால் இந்த நோய் வந்துள்ளது.**

**★ உலகப் புகையிலை உற்பத்தியில் இந்தியா நான் காவது இடத்தையும் ஏற்றுமதியில் எட்டாவது இடத்தை யும் வகிக்கிறது.**



# காலணி தயாரிப்பில் மகளிர்

—ஜோசப் சந்திரகுமார்

**கா**லணிதானே என்று அலட்சியப்படுத்த வேண்டாம். வீட்டு வாசலுடன் நின்றுவிடும் காலணிகளுக்கு ஏற்றுமதி வர்த்தக அரங்கிலோ பெரும் வரவேற்பு உள்ளது. வரும் 2000-ஆம் ஆண்டில் இவற்றின் ஏற்றுமதி ரூ.9,000 கோடியை எட்டும் என்றால் சும்மாவா! கடந்த ஆண்டில் (1992-93) காலணிகள்-காலணி பாகங்களின் ஏற்றுமதி ரூ.1,180 கோடியைத் தொட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்து அரிய அன்னியச் செலாவணியைக் குவிக்கும் காலணித் தயாரிப்பு மூலம் உள்நாட்டிலோ 6 இலட்சம் பேர் நேரடி வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இவர்கள் ஆண்டுதோறும் தயாரித்துக் குவிக்கும் தோல் காலணி இணைகளின் எண்ணிக்கையோ 44 கோடியாகும்!

தோல் - தோல் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியாவிற்கு வளமான எதிர்காலம் உள்ளது. இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் சர்வதேசக் காலணி வர்த்தகத்தில் நாம் பெரும் பங்கு வகிப்போம். இந்தியத் தோல் தொழிலில் காலணித் தயாரிப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. அன்னியச் செலாவணியை ஈட்டுவதுடன், வேலை வாய்ப்பும் அளிப்பதால் தேசியப் பொருளாதாரத்துக்குத் தோல்துறை பெருமளவில் உதவுகிறது. கடந்த 20 ஆண்டுகளில் இந்தியத் தோல் தொழில் துறை கணிசமாக முன்னேறியுள்ளது.

**மகளிர் பங்கு**

அரிசி விளைவிப்பதில் இருந்து ஆகாய விமானம் ஓட்டுவது வரை என அனைத்து தேசிய வளர்ச்சித் துறைகளிலும் தமது உரிமையை நிலைநாட்டி வரும் இந்திய மகளிர், இத்துறையிலும் தமக்குரிய பங்கைப் பெற்று வருகின்றனர். காலணித் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள 6 இலட்சம் தொழிலாளர்களில் மகளிரின் பங்கு 1.5 இலட்சமாகும் (25%). இயந்திரமாக்கப்பட்ட காலணித் தயாரிப்பு ஆலைகளிலும் கூட இவர்கள் பெருமளவில் உள்ளனர். தயாரிக்கப்படும் காலணிகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் ஊதியம் வழங்கும் நிறுவனங்களில் இவர்கள் நீக்கமற நிறைந்துள்ளனர் என்றே கூறலாம்.

பெரும்பாலும் 21-30 வயதுப் பிரிவில் உள்ள பெண்களே இங்கு பணி புரிகின்றனர். வேலையின் தன்மை மற்றும் அனுபவத்தைப் பொறுத்த மாதம்தோறும் ரூ.350-ல் இருந்து ரூ.1,200 வரை இவர்களுக்கு ஊதியம் கிடைக்கிறது. விதவைகளும் ஆதரவற்ற மகளிரும் கூட ஆலைகளில் பெரும் எண்ணிக்கையில் வேலை செய்கின்றனர். பல்வேறு இயந்திரங்களை இயக்கும் திறன் பெற்றிருந்தாலும், பெண்கள் பெரும்பாலும் கீழ்மட்ட அளவிலேயே வேலை செய்கின்றனர். பெரும் விரிவாக்கத்தை எதிர்நோக்கியுள்ள இத்துறையில், உரிய பயிற்சிகள் மற்றும் வாய்ப்புகள் அளித்தால் பல்வேறு தரப்பட்ட உயர்நிலைப் பணிகளையும் மேற்கொள்ளும் ஆற்றலை இவர்கள் பெறுவார்கள் என்பது உறுதி. தொழில் முனைவோர் நிலையைக்கூட இவர்கள் எட்ட இயலும்!

**தடைகளை மீறி...**

ஒரு காலத்தில் காலணித் தயாரிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கான பணியாகக் கருதப்பட்டு வந்தது. எனவே, சாதி, மத மற்றும் சமூகத் தடைகள் பெண்கள் இத்தொழிலில் பங்கேற்பதற்குத் தடையாக இருந்தன. எனினும் பெருகிவரும் பொருளாதார நெருக்கடிகள், இத்தடைகளையும்

• "பெண்ணின் உண்மையான அணி, அவளது புனிதமான ஒழுக்கமே ஆகும். உலோகமும் கல்லும் உண்மையான அணிகலன்கள் அல்ல.

• நம்மைவிடச் சிலர் தாழ்ந்தவர்களென்று நாம் கருதுவது நம்மிடையே தீமை மிகுதியாக இருக்கிறதென்பதைக் காட்டுகிறது. இந்தத் தீமையை நாம் ஒழிக்காவிட்டால் அது நம்மை ஒழித்துவிடும்.

— அண்ணல் காந்தியடிகள்

மீறி பெண்கள் இத்தொழிலில் ஈடுபட வைத்துள்ளது. பல்வேறு மதப் பிரிவினர் சேர்ந்து பணியாற்றும் இச்சூழல், சமூக நல்லிணக்கமும் நட்புறவும் வளர்ந்திட உதவுகிறது. தமிழகத்தில் வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் பெருமளவில் முகமதிய மகளிரும் காலணித் தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

**காலணியும் காதணியும்**

காலணித் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள மகளிரின் சமூகப் பொருளாதார வாழ்க்கை இயலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தமது சம்பாதிக்கும் திறனால் குடும்பத்தில் முடிவெடுக்கும் உரிமைகளை இவர்கள் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தகுந்ததொரு ஏற்றம். பொருளாதார முன்னேற்றத்தால் வாழ்க்கைத் தரமும் கூடியுள்ளது. இது வரை தமது சக்திக்கு மீறியதாக இருந்த ஆடை- அணிகலன்கள், வீட்டு உபயோகச் சாதனங்கள், நுகர்வோர் பொருட்கள் போன்றவைகளை இவர்கள் வாங்கி அனுபவிக்க இயலுகிறது. சிறிது சிறிதாகச் சொத்தும் சேர்த்து வருகின்றனர். உணவு நுகர்வும் முன்னேறியுள்ளது. குழந்தைகளில் கல்வி குறித்த கண்ணோட்டமும் சாதகமானப் போக்கில் மாறியுள்ளது. வசதியான இருப்பிடம், சுத்தமான சுற்றுப்புறத்தால் இவர்களது சுகாதாரம் மேம்பட்டுள்ளது. இப்பொழுது புரிந்திருக்குமே - காலணிக்கும் காதணிக்கும் உள்ள தொடர்பு!

**கல்யாணச் சந்தையில்**

பணி புரிவதால் சமூகத்தில் இவர்களது அந்தஸ்து · ஒருபடி உயர்ந்துள்ளது. சொல்லப்போனால், இத்தகையத் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பது என்பது ஒரு கவுரவமான விஷயமாகவே கருதப்படுகிறது. கல்யாணம் கூடி வருவதற்கு இது ஒரு கூடுதல் தகுதியாகவும் திகழ்கிறது என்றால் மேலும் கூறவும் வேண்டுமோ

ஆலையில் பணிபுரியும் போது தலை குனிந்த நிலையிலேயே வேலை செய்ய நேரிடினும், சமூகத்தில் இவர்கள் நிமிர்ந்த நன்னடையுடன் செயல்பட முடிகிறது.

பத்திரிகைத் தகவல் அலுவலகம்


மாவட்டச் சிறப்பிதழ் வரிசையில்...

# தமிழரசு

16.11.93 இதழ்

மதுரை மாவட்டச்

சிறப்பிதழாக

மலர்கிறது!

★ மாவட்டம் பற்றிய பொன்னான தகவல்கள்

★ மண்வாசனை கமழும் மாவட்டச் சிறுகதை!

★ அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்!

★ கற்கண்டாய் இனிக்கும் கவிதைகள்!

★ உள்ளம் தொடும் உண்மைக் கதைகள்!

★ பக்கத்துக்குப் பக்கம் படங்கள்!

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!





கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண்: M. 8676
Licence No. TN/MS(C)/PP-23











